# இந்திய அரசியலமைப்பு

**TNPSC GROUP - I, II, II (A), IV**



போட்டித் தேர்விற்கு
படிக்கிறவர்களின்
கைகளில்
இருக்க வேண்டிய
ஒப்பற்ற புத்தகம்

"பாரத பூமி பழம் பெரும் பூமி
நீரதன் புதல்வர் இந் நினைவ கற்றாதீர்"

*We are proud to be*
**AN INDIAN.**



என்றும் மாணவர் நலனில்...

**TAF IAS ACADEMY**

தமிழகம் முழுவதும் 60+ கிளைகள் - 17 ஆண்டுகளில் 18,740+ பேருக்கு அரசுப்பணி

**J.Aagasa Moorthy** M.Com., LL.B.,
Founder, TAF IAS ACADEMY

# TAF BOOK's

# இந்திய அரசியலமைப்பு

## (புதிய பாடத்திட்டம்)



"அரசியலமைப்பு என்பது வெறும் வழக்கறிஞர்களின் ஆவணம் அல்ல,
அது வாழ்க்கையின் ஒரு வாகனம்,
அதன் ஆன்மா எப்போதும் யுகத்தின் ஆன்மாவாகும்."

- டாக்டர் B.R.அம்பேத்கர்


அரசுப் பணியைப் பெற TAF உடன் கைகோருங்கள் / தமிழகம் முழுவதும் 60 கிளைகள்

TM 5386328

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்!  முயற்சி! பயிற்சி!! வெற்றி!!!

TAF IAS ACADEMY

17 ஆண்டுகளில் 18,740+ பேருக்கு அரசுப்பணி

Head Office: TAF IAS ACADEMY, Railway Road,Near Railway Station, Tenkasi, 627811

COACHING FOR

UPSC | TNPSC | POLICE | SSC | BANK | RAILWAY | TET | TRB

9597587300  https://tafiasacademy.in

Follow us on social media! @tafiasacademy


## பதிப்புரிமை

ஆசிரியரின் எழுத்து மூலமான அனுமதியின்றி இப்புத்தகத்தை மறுபதிப்பு செய்யவோ வேறு மொழிகளில் மொழி பெயர்க்கவோ, அச்சடிக்கவோ கூடாது.



| | | |
|---|---|---|
| தலைப்பு | : | இந்திய அரசியலமைப்பு |
| ஆசிரியர் | : | TAF அரசியலமைப்பு துறை |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | 2026 |
| பக்கங்கள் | : | 776 பக்கங்கள் |
| விலை | : | ரூ.700/- |

இப்புத்தக உருவாக்கத்திற்கு உதவி செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றி...!



**Thanks To All The Contributors Of This Book..**

## பொருளடக்கம்


| வ.எண் | பாடத் தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | **இந்திய அரசியலமைப்பின் தொடக்கம்** | 01 – 33 |
| | 1.1 இந்திய அரசியலமைப்பு உருவான வரலாறு | 01 – 20 |
| | 1.2 அரசியல் நிர்ணய சபை | 21 – 33 |
| 2. | **இந்திய அரசியலமைப்பின் முக்கிய கூறுகள்** | 34 – 48 |
| | 2.1 இந்திய அரசியலமைப்பின் சிறப்பியல்புகள் | 34 – 40 |
| | 2.2 இந்திய அரசியலமைப்பின் மூலங்கள் | 41 – 42 |
| | 2.3 இந்திய அரசியலமைப்பின் பகுதிகள் | 43 – 44 |
| | 2.4 இந்திய அரசியலமைப்பின் அட்டவணைகள் | 45 – 48 |
| 3. | முகவுரை | 49 – 60 |
| 4. | ஒன்றியம் மற்றும் அதன் ஆட்சிப் பகுதிகள் | 61 – 78 |
| 5. | குடியுரிமை | 79 – 93 |
| 6. | அடிப்படை உரிமைகள் | 94 – 129 |
| 7. | அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் | 130 – 142 |
| 8. | அடிப்படைக் கடமைகள் | 143 – 147 |
| 9. | **மத்திய அரசு** | 148 – 248 |
| | 9.1 குடியரசுத் தலைவர் | 148 – 169 |
| | 9.2 குடியரசுத் துணைத்தலைவர் | 170 – 174 |
| | 9.3 பிரதமர் | 175 – 186 |
| | 9.4 மத்திய அமைச்சரவை | 187 – 192 |
| | 9.5 இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் (அட்டார்னி ஜெனரல்) | 193 – 194 |
| | 9.6 இந்திய தலைமை கணக்குத் தணிக்கையாளர் | 195 – 197 |
| | 9.7 நாடாளுமன்றம் | 198 – 248 |

| | | |
|---|---|---|
| 10. | **மாநில அரசு** | **249 – 293** |
| | 10.1 ஆளுநர் | 249 – 260 |
| | 10.2 முதலமைச்சர் | 261 – 274 |
| | 10.3 மாநில அமைச்சரவை | 275 – 278 |
| | 10.4 மாநில அரசின் தலைமை வழக்குரைஞர் (அட்வகேட் ஜெனரல்) | 279 – 280 |
| | 10.5 சட்டமன்றம் | 281 – 293 |
| 11. | **இந்திய நீதித்துறை** | **294 – 338** |
| | 11.1 இந்தியாவில் நீதித்துறையின் பரிணாம வளர்ச்சி | 294 – 300 |
| | 11.2 உச்ச நீதிமன்றம் | 301 – 314 |
| | 11.3 உயர் நீதிமன்றங்கள் | 315 – 327 |
| | 11.4 கீழமை நீதிமன்றங்கள் | 328 – 330 |
| | 11.5 சட்டத்தின் ஆட்சி | 331 – 332 |
| | 11.6 நீதி புனராய்வு, நீதித்துறை செயல்பாடு & பொது நல வழக்கு | 333 – 338 |
| 12. | யூனியன் பிரதேசங்கள் | 339 – 348 |
| 13. | **உள்ளாட்சி அமைப்புகள்** | **349 – 388** |
| | 13.1 உள்ளாட்சி அரசாங்கம் – பொருள் மற்றும் வகைகள் | 349 – 350 |
| | 13.2 இந்தியாவில் உள்ளாட்சி அரசாங்கத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி | 350 – 353 |
| | 13.3 பஞ்சாயத்து ராஜ் மற்றும் 73–வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் | 354 – 370 |
| | 13.4 கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள் | 371 – 373 |
| | 13.5 நகராட்சிகள் மற்றும் 74–வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் | 374 – 378 |
| | 13.6 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | 379 – 386 |
| | 13.7 கூட்டுறவு சங்கங்கள் | 387 – 388 |
| 14. | பட்டியலிடப்பட்ட மற்றும் பழங்குடியினப் பகுதிகள் | 389 – 393 |
| 15. | இந்தியக் கூட்டாட்சியின் அடிப்படைத் தன்மைகள் | 394 – 403 |
| 16. | **மத்திய மாநில உறவுகள்** | **404 – 444** |
| | 16.1 சட்டமன்ற உறவுகள் | 404 – 407 |
| | 16.2 நிர்வாக உறவுகள் | 408 – 424 |
| | 16.3 நிதி உறவுகள் | 425 – 444 |

| | | |
|---|---|---|
| 17. | வர்த்தகம், வணிகம் மற்றும் போக்குவரத்து சுதந்திரம் | 445 |
| 18. | பொதுப்பணிகள் | 446 – 457 |
| 19. | தீர்ப்பாயங்கள் | 458 – 463 |
| 20. | **தேர்தல் மற்றும் இந்தியாவில் அரசியல் கட்சிகள்** | 464 – 499 |
| | 20.1 தேர்தல் | 464 – 489 |
| | 20.2 தேசிய கட்சிகள் மற்றும் மாநில கட்சிகளின் அங்கீகாரம் | 490 – 491 |
| | 20.3 இந்தியாவில் அரசியல் கட்சிகள் மற்றும் ஆட்சியியல் முறைகள் | 492 – 494 |
| | 20.4 தமிழ்நாட்டில் அரசியல் கட்சிகள் மற்றும் ஆட்சியியல் முறைகள் | 495 - 496 |
| | 20.5 அழுத்தக் குழுக்கள் | 497 – 499 |
| 21. | சில வகுப்பினர் தொடர்பான சிறப்பு வகைமுறைகள் | 500 – 507 |
| 22. | ஆட்சி மொழிகள் | 508 – 513 |
| 23. | நெருக்கடி நிலைகள் | 514 – 522 |
| 24. | பல்வகை | 523 |
| 25. | அரசியலமைப்பு திருத்தங்கள் | 524 – 551 |
| 26. | தற்காலிக மற்றும் இடைக்கால சிறப்பு வகை முறைகள் | 552 – 554 |
| 27. | அரசியலமைப்புச் சட்டத்தின் ஆரம்பம் & ரத்து | 555 |
| 28. | அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பு | 556 – 558 |
| 29. | அரசியலமைப்பு சார்ந்த அமைப்புகள் | 559 |
| 30. | **அரசியலமைப்பு சாராத அமைப்புகள்** | 560 – 621 |
| | **சட்டம் சாரா அமைப்புகள்** | 560 – 572 |
| | 30.1 திட்டக்குழு | 561 – 563 |
| | 30.2 தேசிய வளர்ச்சிக் குழு | 564 |
| | 30.3 நிதி ஆயோக் | 565 – 572 |
| | **சட்டம் சார் அமைப்புகள்** | 573 – 621 |
| | 30.4 மத்திய புலனாய்வு அமைப்பு | 573 – 576 |
| | 30.5 மத்திய ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆணையம் | 577 – 579 |
| | 30.6 லோக் அதாலத் | 580 – 581 |
| | 30.7 தேசிய பெண்கள் ஆணையம் | 582 – 583 |

| | | |
|---|---|---|
| | 30.8 மாநில பெண்கள் ஆணையம் | 584 |
| | 30.9 தேசிய மனித உரிமைகள் ஆணையம் | 585 – 588 |
| | 30.10 மாநில மனித உரிமைகள் ஆணையம் | 589 – 593 |
| | 30.11 மத்திய தகவல் ஆணையம் | 594 – 596 |
| | 30.12 மாநில தகவல் ஆணையம் | 596 – 598 |
| | 30.13 தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் | 599 – 602 |
| | 30.14 தேசிய புலனாய்வு முகமை | 603 – 605 |
| | 30.15 லோக்பால் | 606 – 611 |
| | 30.16 லோக் ஆயுக்தா | 612 – 615 |
| | 30.17 தேசிய சிறுபான்மையினர் ஆணையம் | 616 |
| | 30.18 தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் | 617 |
| | 30.19 தேசிய குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் | 617 – 618 |
| | 30.20 மாநில குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் | 618 |
| | 30.21 இந்திய சட்ட ஆணையம் | 619 |
| | 30.22 இந்திய எல்லை நிர்ணய ஆணையம் | 619 – 620 |
| | 30.23 இந்திய வழக்குரைஞர்கள் சங்கம் | 620 – 621 |
| 31. | தகவல் அறியும் உரிமைச் சட்டம் | 622 – 625 |
| 32. | பொது வாழ்வில் ஊழல் | 626 – 631 |
| 33. | நுகர்வோர் பாதுகாப்பு | 632 – 642 |
| 34. | பெண்களுக்கு அதிகாரமளித்தல் | 643 – 674 |
| 35. | மனித உரிமைகள் | 675 – 682 |
| 36. | இந்தியாவின் தேசிய சின்னங்கள் (ம) தமிழ்நாட்டின் மாநில சின்னங்கள் | 683 – 688 |
| 37. | அரசியலமைப்பு தொடர்பான முக்கிய வழக்குகள் | 689 – 710 |
| 38. | அசல் வினாத்தாள்கள் | 711 – 738 |
| | 38.1 முதல் நிலை தேர்வு (PRELIMINARY) | 711 – 728 |
| | 38.2 முதன்மை தேர்வு (MAINS) | 729 – 738 |
| 39. | இந்தியா மற்றும் தமிழ்நாடு முதன்மைகள் | 739 – 745 |
| 40. | இந்திய அரசியலமைப்பின் விதிகள் | 746 – 764 |

We are PROUD to be Indians

26TH NOVEMBER
CONSTITUTION DAY

# இந்திய அரசியலமைப்பு

## முகவுரை

இந்திய மக்களாகிய நாம், இந்தியாவை ஒரு இறையாண்மை மிக்க, சமதர்ம, சமயசார்பற்ற, மக்களாட்சி, குடியரசாக - அமைக்கவும். அதன் குடிமக்கள் அனைவருக்கும்

சமுதாய, பொருளாதார மற்றும் அரசியல் - நீதியும்
சிந்தனையில், சிந்தனை வெளிப்பாட்டில், நம்பிக்கையில், பற்றார்வத்தில் மற்றும் வழிபாட்டில் - சுதந்திரமும்
தகுதிநிலை மற்றும் வாய்ப்பில் - சமத்துவமும் உறுதியாக கிடைக்கச் செய்யவும்.

தனி ஒருவரின் மாண்பிற்கும், நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் உறுதியளிக்கும் - சகோதர உணர்வை அவர்கள் அனைவரிடையே வளர்க்கவும்.

விழுமிய முறையுடன் உறுதிப்பூண்டு 1949, நவம்பர் 26-ம் நாளாகிய இன்று நமது அரசியலமைப்பு நிர்ணய சபையில் இந்த அரசியல் அமைப்பை ஏற்று, சட்டமாக இயற்றி நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்.

ஏதல் | B2 LAW ACADEMY

TAF IAS ACADEMY
Coaching for : UPSC - TNPSC - POLICE - SI - TET - TRB - RAILWAY - BANKING - SSC

SCAN THE QR CODE





# 01 இந்திய அரசியலமைப்பின் தொடக்கம்

## 1.1 இந்திய அரசியலமைப்பு உருவான வரலாறு

### ஆங்கிலேயர் ஆட்சியும் இந்திய அரசியலமைப்பின் வரலாறும் (British Rule and History of Indian Constitution)

- இந்திய அரசியலமைப்பின் வளர்ச்சியானது இங்கிலாந்து நம்மை ஆட்சி செய்த காலத்தில் இருந்தே தொடங்குகிறது.

### ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி (British East India Company)

- **கி.பி 1600 டிசம்பர் 31 இங்கிலாந்து அரசி முதலாம் எலிசபத்** அவர்களால் வெளியிடப்பட்ட பட்டயத்தின்படி ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவில் வணிகத்தளங்களை அமைத்தது.
- ஆரம்பத்தில் வியாபார நிறுவனமாக இந்தியாவிற்குள் வந்து **நிருவாகச் சக்தியாக** உருவெடுத்தது.
- இந்தியாவில் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியின் அரசியல் ஆதிக்கம் ஏற்பட வங்காளத்தில் நடைபெற்ற பிளாசிப் போர் (1757, ஜுன் 23) மற்றும் பக்சார் போர் (அக்டோபர் 22, 1764) காரணமாக அமைந்தன.
- 1764 ஆம் ஆண்டு வரை வர்த்தகப் பணிகள் மட்டுமே செய்து வந்த கிழக்கிந்திய கம்பெனியானது, **1765** இல் கையெழுத்தான **அலகாபாத் உடன்படிக்கை** பக்சார் போரை முடிவுக்கு கொண்டு வந்தது.
- இவ்வுடன்படிக்கையின் படி ஆங்கிலேயர்கள் **வங்காளம், பீகார், ஒரிசா** பகுதிகளில் திவானி உரிமையைப் பெற்றனர். அதாவது, வருவாய், வரிவசூல் மற்றும் குடிமையியல் நீதி **(Civil Rights)** மீதான உரிமைகள் ஆகும்.
- ஆங்கிலேயர்களுக்கு திவானி உரிமையை இறுதி செய்தவர் முகலாயப் பேரரசர் **'ஷா ஆலம்'** ஆவார்.
- இந்தியாவை நிர்வாகம் செய்ய கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியில் ஒழுங்குமுறைச் சட்டம் மற்றும் **பட்டயச் சட்டங்கள்** கொண்டுவரப்பட்டன.

### ஆங்கிலேய நேரடி ஆட்சி (British Direct Rule)

- 1857 ஆம் ஆண்டு பெரும் புரட்சிக்குப் பின்னர், கிழக்கிந்திய கம்பெனி ஆட்சி முடிவுக்கு வந்தது, **விக்டோரியா மகாராணியின் பேரறிக்கையின்** (Queen Victoria Proclamation) மூலம் இங்கிலாந்து அரசின் நேரடி ஆட்சி ஏற்பட்டது.
- பின்னர் இங்கிலாந்து நாடாளுமன்றத்தால் இந்தியக் **கவுன்சில் சட்டங்கள்** மற்றும் இந்திய அரசுச் சட்டங்கள் இந்தியாவை நிர்வகிக்க இயற்றப்பட்டன.
- இவற்றின் **பரிணாம வளர்ச்சி தான்** இன்றைய நமது இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஆகும். எனவே நமது அரசியலமைப்பின் பெரும்பகுதியானது இங்கிலாந்து அரசியலமைப்பிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

> ✍ ஒரு நாட்டின் நிர்வாகமானது எந்த அடிப்படை கொள்கைகளை சார்ந்து அமைந்துள்ளது என்பதை பிரதிபலிக்கும் அடிப்படைச் சட்டமே **(Fundamental law) அரசியலமைப்பு** ஆகும்.
>
> ✍ அரசியலமைப்பு என்ற கருத்தாக்கம் முதன் முதலில் **அமெரிக்க ஐக்கிய நாடுகளில்** தோன்றியது.

**"Constitution – Supreme Law of Land"**

- **இந்திய அரசியலமைப்பின் வளர்ச்சியை 2 பிரிவுகளாகப் பிரிக்கலாம்.**

1. கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியில் கொண்டுவரப்பட்ட சட்டங்கள் (1773 - 1857)
2. பிரிட்டிஷ் நேரடி ஆட்சியில் கொண்டுவரப்பட்ட சட்டங்கள் (1858 - 1947)

**ஆங்கில ஆட்சிக் கால நிர்வாகச் சட்டங்கள்**

**1857 பெரும்புரட்சியின் விளைவாக ஆட்சிமாற்றம்**

**ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியில் கொண்டுவரப்பட்ட சட்டங்கள் (1773 - 1858)**

- 1773 – ஒழுங்குமுறைச் சட்டம்
- 1784 – பிட் இந்தியச் சட்டம்
- 1793 – இந்திய சாசன / பட்டயச் சட்டம்
- 1813 – இந்திய சாசன / பட்டயச் சட்டம்
- 1833 – இந்திய சாசன / பட்டயச் சட்டம்
- 1853 – இந்திய சாசன / பட்டயச் சட்டம்

**பிரிட்டிஷ் நேரடி ஆட்சியில் கொண்டுவரப்பட்ட சட்டங்கள் (1858 - 1947)**

- 1858 – இந்திய அரசாங்கச் சட்டம்
- 1861 – இந்திய கவுன்சில் சட்டம்
- 1892 – இந்திய கவுன்சில் சட்டம்
- 1909 – இந்திய கவுன்சில் சட்டம்
- 1919 – இந்திய அரசுச் சட்டம்
- 1935 – இந்திய அரசுச் சட்டம்
- 1947 – இந்திய சுதந்திரச் சட்டம்

## ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்ட சட்டங்கள்

## (Laws Enacted During British East India Company)

### 1. ஒழுங்குமுறை சட்டம் - 1773 (Regulating Act - 1773)

- இங்கிலாந்து அரசானது ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியை ஒழுங்குபடுத்தி இந்தியாவில் கம்பெனி நிர்வாகம் செய்ய உரிமை வழங்கி ஒரு சட்டம் இயற்றியது. இதுவே, ஒழுங்குமுறைச் சட்டம் ஆகும்.
- இச்சட்டம் **இங்கிலாந்து** பிரதமர் **நார்த்** பிரபு என்பவரால் கொண்டுவரப்பட்டது.
- இச்சட்டம் இந்திய அரசியலமைப்பின் **முதல் படி / அடிக்கல்** என்று அழைக்கப்படுகிறது.
- இச்சட்டமே பிற்கால இந்திய அரசியலமைப்பிற்கு **அடித்தளமாக** அமைந்தது.
- எழுதப்பட்ட அரசியலமைப்பு மூலம் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியின் அரசியல் மற்றும் நிர்வாகப் பொறுப்புகளை முதன் முறையாக அங்கீகரித்தது.

ஒழுங்குமுறைச் சட்டத்தின் படி **மூன்று பிரிவுகளில் சீர்த்திருத்தம்** செய்யப்பட்டது.

| வணிகத்துறை | நிர்வாகத்துறை | நீதித்துறை |
|---|---|---|
| இயக்குநர் குழு (24 பேர்கள்) | கவர்னர் ஜெனரல் மற்றும் 4 பேர் கொண்ட நிர்வாகக் குழு (1+4) | 1 தலைமை நீதிபதி மற்றும் 3 நீதிபதிகள் (1+3) |

## இந்திய அரசியலமைப்பின் முக்கிய கூறுகளும், பெறப்பட்ட நாடுகளும்




**இந்திய அரசுச் சட்டம்:**

- அரசு பணியாளர்கள் தேர்வாணையம்
- அரசு நிர்வாகம்
- அதிகாரப் பகிர்வு
- ஆளுநரின் பதவி
- கூட்டாட்சி விதிகள்
- பட்டியல்கள்
- நிர்வாக விவரங்கள்
- நீதித்துறை அமைப்பு
- நெருக்கடி நிலைகள்
- தோற்றம் (RBI சட்டம் - 1934)



**இங்கிலாந்து அரசியலமைப்பு :**

- அமைச்சரவை மக்களவைக்கு பொறுப்பு
- இடைக்காலத் தடை ஆணை
- ஈரவை அரசாங்கம் (Bicameralism)
- ஒற்றை குடியுரிமை
- கீழ்சபை அதிக அதிகாரம் கொண்டது
- கேபின் அமைச்சரவை
- குடியரசுத் தலைவர் பெயரளவுத் தலைவர்
- சட்டத்தின் ஆட்சி (Rule of law)
- சட்டம் இயற்றும் விதிமுறைகள்
- சபாநாயகர்
- நாடாளுமன்ற அரசாங்கம்
- நாடாளுமன்ற செயல்முறைகள் மற்றும் சிறப்புரிமைகள்
- நிதிப்பேராணை
- பிரதமர்




**அமெரிக்க அரசியலமைப்பு :**

- அடிப்படை உரிமைகள்
- எழுதப்பட்ட அரசியலமைப்புச் சட்டம்.
- உச்ச / உயர்நீதிமன்ற நீதிபதிகளின் பதவி நீக்க முறை.
- குடியரசுத் தலைவர் முப்படைகளின் தலைவர்
- குடியரசுத் தலைவர் மீதான பதவிநீக்க முறை (Impreachment)
- துணை குடியரசுத் தலைவர் பதவி மற்றும் பதவி நீக்க முறை
- நீதிப்புணராய்வு
- நீதித்துறை சுதந்திரம்
- முகவுரை



**ஜெர்மனியின் வெய்மார் அரசியலமைப்பு :**

- நெருக்கடி நிலையின் போது அடிப்படை உரிமைகளை நிறுத்தி வைத்தல் (Suspension).



**அயர்லாந்து அரசியலமைப்பு :**

- அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் (DPSP)
- குடியரசுத் தலைவர் தேர்தல் முறை
- இராஜ்ய சபா உறுப்பினர்கள் நியமனம்



**கனடா அரசியலமைப்பு :**

- வலுவான மத்திய அரசாங்கம்
- மத்திய அரசால் ஆளுநர் நியமனம்
- உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனை வரம்பதிகாரம்
- எஞ்சிய அதிகாரங்களை மத்திய அரசு வைத்திருத்தல் (Residuary powers).




**ஆஸ்திரேலியா அரசியலமைப்பு :**

- முகப்புரையின் மொழி
- இரு அவைகளின் கூட்டுக்கூட்டம்
- பொதுப்பட்டியல் (Concurrent list)
- வணிகம், வியாபாரம் (ம) போக்குவரத்து சுதந்திரம்.



**சோவியத் இரஷ்யா அரசியலமைப்பு :**

- அடிப்படை கடமைகள்
- ஐந்தாண்டுத் திட்டங்கள்
- முகப்புரையின் சமூகப் பொருளாதார (ம) அரசியல் நீதி




**பிரெஞ்சு அரசியலமைப்பு :**

- குடியரசு அமைப்பு
- முகப்புரையின் சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் பற்றிய குறிக்கோள்கள்



**தென்னாப்பிரிக்க அரசியலமைப்பு :**

- அரசியலமைப்புத் திருத்தும் முறை
- மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்தல்



**ஜப்பான் அரசியலமைப்பு :**

- சட்டத்தால் உருவாக்கப்பட்ட நடைமுறை (Procedure established by law).



**சுவிட்சர்லாந்து அரசியலமைப்பு :**

- கூட்டுறவு (அ) வரம்பிற்குட்பட்ட கூட்டாட்சி அதிகாரங்கள்.

## 2.3 இந்திய அரசியலமைப்பின் பகுதிகள்

- இந்திய அரசியலமைப்பின் தொடக்கத்தில் **22 பகுதிகள்** இருந்தன.
- தற்போது **25 பகுதிகள்** உள்ளன.
- பகுதிகள் IVA, IX, IXA, IXB, XIVA ஆகிய ஐந்தும் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது.
- பகுதி VII நீக்கப்பட்டுள்ளது. (1956 ஆம் ஆண்டு 7 வது சட்டத்திருத்தத்தின் படி

| பகுதி (Part) | இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் | விதிகள் / சரத்துகள் (Article) |
|---|---|---|
| I | ஒன்றியமும் அதன் ஆட்சி எல்லையும் | 1 – 4 |
| II | குடியுரிமை | 5 – 11 |
| III | அடிப்படை உரிமைகள் | 12 – 35 |
| IV | அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் | 36 – 51 |
| IV-A | அடிப்படைக் கடமைகள் (42வது சட்டத்திருத்தம் 1976 ஆம் ஆண்டின் படி சேர்க்கப்பட்டது) | 51 A |
| V | **மத்திய அரசாங்கம்** | 52 – 151 |
| | குடியரசுத் தலைவர் | 52 – 62 |
| | குடியரசுத் துணைத் தலைவர் | 63 – 71 |
| | பிரதமர் | 74 – 78 |
| | மத்திய அமைச்சர்கள் | |
| | இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் **(Attorney General)** | 76 |
| | பாராளுமன்றம் | 79 – 122 |
| | குடியரசுத் தலைவரின் அவசரச் சட்டம் | 123 |
| | உச்ச நீதிமன்றம் | 124 – 147 |
| | இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவர் **(Comptroller and Auditor General of India)** | 148 - 151 |
| VI | **மாநில அரசாங்கம்** | 152 – 237 |
| | பொது | 152 |
| | ஆளுநர் | 153 – 162 |
| | மாநில அமைச்சர்கள் | 163 – 167 |
| | மாநில அரசின் தலைமை வழக்குரைஞர் **(Advocate General)** | 165 |
| | சட்டமன்றம் | 168 – 212 |
| | ஆளுநரின் அவசரச் சட்டம் | 213 |
| | உயர்நீதிமன்றம் | 214 – 232 |
| | துணை நீதிமன்றம் | 233 – 237 |
| VII | பகுதி B –ல் உள்ள மாநிலங்கள் தொடர்பானது (7வது சட்டத்திருத்தம் 1956 ஆம் ஆண்டின் படி நீக்கப்பட்டது) | 238 |

**முகவுரையில் உள்ள முக்கிய வாசகங்கள்**

| 1789 பிரெஞ்சு புரட்சி | 1917 இரஷ்யப் புரட்சி | 1976 42வது சட்டத்திருத்தம் |
|---|---|---|
| 1. சுதந்திரம் (Liberty) | 1. அரசியல் நீதி (Political Justice) | 1. சமதர்மம் (Socialist) |
| 2. சமத்துவம் (Equality) | 2. பொருளாதார நீதி (Economic Justice) | 2. சமயச்சார்பின்மை (Secular) |
| 3. சகோதரத்துவம் (Fraternity) | 3. சமூக நீதி (Social Justice) | 3. ஒருமைப்பாடு (Integrity) |

**முகவுரை பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள்**

| கருத்துக்கள் | அறிஞர்கள் |
|---|---|
| 1. "வழக்குகளின் சொர்க்கம்" (Paradise of Cases) | A.V.டைசி |
| 2. "வழக்கறிஞர்களின் சொர்க்கம்" (Paradise of Lawyers) | சர் ஐவர் ஜென்னிங்ஸ் |
| 3. "இந்திய அரசியலமைப்பின் திறவுகோல் (Key), முக்கிய குறிப்பு (Key note)" | எர்னஸ்ட் பார்க்கர் |
| 4. "அரசியலமைப்பின் அடையாள அட்டை" (Identity Card) | N.A.பால்கிவாலா |
| 5. "இறையாண்மையுடைய மக்களாட்சிக் குடியரசின் ஜாதகம்" (Horoscope) | K.M.முன்ஷி |
| 6. அரசியலமைப்பின் பெரும் மதிப்பு வாய்ந்த பகுதி மற்றும் திறவுகோல் "அரசியலமைப்பின் ஊன்றுகோல், ஆன்மா, அணிகலன், அளவுகோல்" (Yardstick, Jewel set, soul of the constitution, key to the constitution) | தாகூர் தாஸ் பார்கவா. |
| 7. "எங்கள் நீண்டநாள் கனவும் ஆசையும்" (Expresses What we had thought or dreamt so long) | அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் |
| 8. (i) "அமெரிக்க நாட்டின் சுதந்திரப் பிரகடனத்தை ஒத்து முகவுரை அமைந்துள்ளது. ஆனால் அந்தப் பிரகடனத்தைவிட மேலானது." (Preamble resembles the declaration of Independence of the USA but is more than a declaration) (ii) "முகவுரை நமது அரசியலமைப்புச் சட்டத்தின் உயிர் மூச்சாகும்" (Preamble serves as the life birth or core essence of the constitution or law) | நீதிபதி இதயத்துல்லா |

✍ இந்திய அரசியலமைப்பின் விதி 394 ஆனது அரசியலமைப்பு எப்போது நடைமுறைக்கு வந்தது என்பதை விளக்கும் தொடக்க (Commencement) விதியாகும். இது பகுதி XXIIல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஜனவரி 26, 1950-ம் நாளில் இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது. இந்நாளே "அரசியலமைப்பின் தொடக்கம்" என்று அழைக்கப்படுகிறது.

- உடனடி அமலாக்கம் : நவம்பர் 26, 1949 (விதிகள் : 5, 6, 7, 8, 9, 60, 324, 366, 367, 379, 380, 388, 391, 392, 393, 394 மட்டும்)
- முழுமையான அமலாக்கம் : ஜனவரி 26, 1950 (இதர அனைத்து விதிகளும்)





# 05

# குடியுரிமை

## குடியுரிமை தொடர்புடைய விதிகள்
## (Articles related to Citizenship)

| | |
|---|---|
| விதி – 5 | அரசியலமைப்பு உருவாக்கத்தின் போது குடியுரிமை |
| விதி – 6 | பாகிஸ்தானில் இருந்து இந்தியாவிற்கு குடிபெயர்ந்த நபர்களுக்கான குடியுரிமை |
| விதி – 7 | இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு குடிபெயர்ந்து மீண்டும் இந்தியாவிற்கே வந்த நபர்களுக்கான குடியுரிமை |
| விதி – 8 | இந்தியாவிற்கு வெளியே வசிக்கும் இந்திய வம்சாவளி நபர்களுக்கான குடியுரிமை |
| விதி – 9 | அயல்நாட்டுக் குடியுரிமையைத் தானாக பெற்றால் இந்தியக் குடியுரிமையை இழத்தல் |
| விதி – 10 | இந்தியக் குடியுரிமையைத் தொடர்தல் |
| விதி – 11 | குடியுரிமையை ஒழுங்குபடுத்தி சட்டமியற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு மட்டுமே உள்ளது |

## குடியுரிமை ஓர் அறிமுகம்
## (Citizenship Introduction)

- குடியுரிமை என்பது ஒருவர் குடிமகனாக இருப்பதற்கான **தகுதிநிலை** ஆகும்.
- குடியுரிமை என்பது ஒரு குடிமகன் அவர் விரும்பும் காலம் வரையில் அந்நாட்டில் சட்டப்படியாக வசிக்கும் உரிமையை வழங்குதல் ஆகும். மேலும் நாட்டின் **குடிமையியல் மற்றும் அரசியல் உரிமைகளை** பெற தகுதியுடையவர்கள் ஆவார்.
- இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்பு இந்தியக் குடியுரிமை என்பது பின்பற்றப்படவில்லை. சுதந்திரத்திற்கு பின்பே குடியுரிமையானது உருவாக்கப்பட்டது.
- **பிரிட்டிஷ் நாட்டுரிமைச் சட்டத்தின்படி, குடியுரிமை** இரண்டு வகைகளாக இருந்தன.
  1. பிரிட்டிஷ் குடிமக்கள் – இந்தியாவில் வசித்தவர்கள் (பிரிட்டிஷ் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகள்)
  2. பிரிட்டிஷ் பாதுகாப்பு பெற்ற மக்கள் – சுதேச அரசில் வசித்தவர்கள் (மன்னர்கள் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகள்)

### குடிமகன் (Citizen)

- குடிமகன் (Citizen) என்ற வார்த்தை சிவிஸ் (Civis) என்ற **இலத்தீன் மொழிச்** சொல்லிலிருந்து பெறப்பட்டது. சிவிஸ் என்பதன் பொருள் **நகர அரசில் வசிப்பவர்**, குடியிருப்பாளர் அல்லது **உறுப்பினர்.**
- ஒருவன், ஒரு அரசாங்கத்திற்கு கட்டுப்பட்டு நடக்கக் கடமைப்பட்டவனாகவும் மற்றும் அந்த அரசாங்கத்திலிருந்து பாதுகாப்பைப் பெற உரிமையுடையவனாகவும் இருப்பானேயானால், அவன் குடிமகன் எனப்படுகிறான்.


| நாட்டுரிமை (Nationality) | குடியுரிமை (Citizenship) |
|---|---|
| ➤ பூர்வீகம், பிறப்பு மற்றும் இனம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட நாட்டினர் இயல்பாக பெறும் நிலை | ➤ சட்ட நடைமுறைகளுக்கு உட்பட்டு ஒரு நாட்டின் அரசாங்கத்தால் தனி ஒருவருக்கு வழங்கப்படுவது |
| ➤ ஒருவர் தனது நாட்டுரிமையை மாற்ற முடியாது | ➤ ஒருவர் தனது குடியுரிமையை மாற்ற முடியும் |

## இந்தியாவில் அடிப்படை உரிமைகள் (Fundamental Rights in India)

- **திரு. பாலகங்காதர திலகர்** 1895 ஆம் ஆண்டு முதன் முதலில் இந்தியர்களுக்கு அடிப்படை உரிமைகள் வேண்டும் என்று குரல் கொடுத்தார்.
- **1928 – நேரு அறிக்கையில் 19 வகையான அடிப்படை உரிமைகள்** இடம்பெற்றிருந்தது.
- **1931 ஆம் ஆண்டு கராச்சியில்** நடைபெற்ற INC மாநாட்டில் அடிப்படை உரிமைகள் தீர்மானம் **வல்லபாய் படேல்** தலைமையில் கொண்டுவரப்பட்டது.
- இந்திய அரசுச் சட்டம் 1935 ஆம் ஆண்டில் **அடிப்படை உரிமைகள் இடம் பெறவில்லை.**
- அரசியலமைப்பு ஆலோசனைக் குழுவால் 2 நாட்களும், துணைக்குழுவால் 11 நாட்களும் மேலும் அரசியல் நிர்ணயச் சபையால் 25 நாட்களும் என **மொத்தம் 38 நாட்கள்** அடிப்படை உரிமைகள் மீதான விவாதம் நடைபெற்றது.
- அரசியலமைப்பின் **பகுதி- III இல் விதிகள் 12 – 35 வரை** அடிப்படை உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.
- அடிப்படை உரிமைகள் **அமெரிக்க** அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டது.
- அடிப்படை உரிமைகள் இந்திய அரசியலமைப்பின் **மூலக்கல்** என்றும் அழைக்கப்படுகிறது.
- அரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்ட போது (ஜனவரி 26, 1950) 7 அடிப்படை உரிமைகள் இருந்தன. **1978 க்குப் பின்னர்** தற்போது வரை **6 உரிமைகளே** உள்ளன.

> இந்திய அரசியலமைப்பில் **மிகக் கடுமையாக விமர்சிக்கப்பட்ட பகுதி** அடிப்படை உரிமைகளே
>
> – **Dr.B.R. அம்பேத்கர்**

## அடிப்படை உரிமைகளின் வகைகள் (Types of Fundamental Rights)



## சுதந்திர உரிமை (விதி 19 - 22)
## (Right to Freedom)

**விதி 19 - 6 வகையான சுதந்திர உரிமைகள் (Protection of Six Rights)**

- அரசியலமைப்பின் தொடக்கத்தில் விதி 19 இல் 7 வகையான சுதந்திர உரிமைகள் இருந்தன. தற்பொழுது **6 வகையான சுதந்திர உரிமைகள்** உள்ளன. அதன்படி,

| | |
|---|---|
| விதி – 19 (1) (a) | **1.பேச்சு மற்றும் கருத்துக்களை வெளியிடும் உரிமை**<br>✍ பத்திரிக்கைச் சுதந்திரம், தகவல் அறியும் உரிமை<br>✍ பேசாமல் அமைதியாக இருக்கும் உரிமை |
| **விதி –19 (2)** | **நியாயமான கட்டுப்பாடுகள்**<br>1. அரசின் பாதுகாப்பு<br>2. அண்டை நாட்டுடன் நட்புறவு<br>3. பொது அமைதி<br>4. அறநெறியிலான ஒழுக்கம்<br>5. நீதிமன்ற அவமதிப்பு<br>6. அவதூறு கூறல்<br>7. குற்றம் செய்யத் தூண்டுதல்<br>8.இறையாண்மை, ஒருமைப்பாடு<br>(மேற்கண்ட வகையங்கள் பாதிக்காத வகையில் கருத்துக்களை வெளியிட வேண்டும்.)<br>✍ 1963 ஆம் ஆண்டு **16-வது** சட்டத்திருத்தத்தின் படி, இறையாண்மை, மற்றும் ஒருமைப்பாட்டை எதிர்க்கும் வகையிலும், மேலும் இந்தியாவைப் பிரிந்து செல்வதைப் பற்றி பேசுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. |
| விதி – 19 (1) (b) | **2. ஆயுதங்களின்றி அமைதியாகக் கூடும் உரிமை** |
| **விதி – 19 (3)** | **நியாயமானக் கட்டுப்பாடுகள்**<br>1. இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாடு, 2. பொது அமைதி<br>(போன்றவற்றைப் பாதிக்கும் வகையில் கூடுவதற்கு உரிமை இல்லை) |
| விதி – 19 (1) (c) | **3. கழகங்கள் /சங்கங்கள், கூட்டுறவு அமைப்புகளை அமைக்கும் உரிமை**<br>✍ **2011 ஆம் ஆண்டு 97-வது** சட்டத்திருத்தத்தின் படி, அரசியலமைப்பில் **கூட்டுறவு அமைப்புகள்** என்ற வார்த்தைகள் சேர்க்கப்பட்டன. |
| **விதி – 19 (4)** | **நியாயமானக் கட்டுப்பாடுகள்**<br>1. இந்தியாவின் இறையாண்மை (ம) ஒருமைப்பாடு, 2. பொது அமைதி, 3. ஒழுக்கம்<br>(போன்றவற்றைப் பாதிக்கும் வகையில் சங்கம் அமைக்க உரிமை இல்லை) |
| விதி – 19 (1) (d) | **4. இந்தியா முழுவதும் சென்றுவரும் உரிமை** |
| விதி – 19 (1) (e) | **5. இந்தியாவின் எல்லைக்குட்பட்ட எந்தப் பகுதியிலும் தங்கி வாழும் உரிமை** |
| **விதி – 19 (5)** | **நியாயமான கட்டுப்பாடுகள்**<br>1. பொதுமக்களின் நலன்<br>2. பழங்குடியினரின் நலனைப் பாதுகாத்தல்<br>(மேற்கண்ட வகையங்களின் காரணமாக இந்தியா முழுவதும் சென்றுவரவும் மற்றும் இந்தியா முழுவதும் எந்தப் பகுதியிலும் தங்கி வாழவும் நியாயமானக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம்) |
| விதி – 19 (1) (g) | **6. தொழில், பணி மற்றும் வணிகங்கள் செய்யும் உரிமை** |
| **விதி – 19 (6)** | **நியாயமானக் கட்டுப்பாடுகள்**<br>1. நியாயமானத் தடையாக இருக்க வேண்டும்.<br>2. பொது மக்களின் நலனுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். |

- தேசிய நெருக்கடி நிலை / அவரச நிலையின் (Nation Emergency) போது விதி 19 தானாகவே செயலிழந்து விடும்.

## அரசு நெறிமுறைக் கோட்பாட்டின் வகைகள் (Classification of DPSP)

- அரசியலமைப்பு அரசு நெறிமுறைக் கோட்பாட்டை வகைப்படுத்தவில்லை.
- எனினும் அதிலுள்ள கருத்துகள் மற்றும் முறைகளை அடிப்படையாக கொண்டு **மூன்று வகையாக** பிரிக்கலாம்.

**அரசு நெறிமுறைக் கோட்பாடுகள்**
**Directive Principles**

| சமதர்ம கொள்கை<br>Socialistic Principles | காந்தியக் கொள்கை<br>Gandhian Principles | தாராள (ம) அறிவுசார் கொள்கை<br>Liberal – intellectual Principles |
|---|---|---|
| **விதி 38** – சமூக, அரசியல் மற்றும் பொருளாதார நீதி | **விதி 40** – கிராம பஞ்சாயத்து. | **விதி 44** – நாடு முழுவதும் ஒரே மாதிரியான பொது சிவில் சட்டம் |
| **விதி 39** – வளங்கள் சமமாக பகிர்தல் சமஊதியம், தொழிலாளர் நலன்.<br>**விதி 39 A** – இலவச சட்ட உதவி | **விதி 43** – குடிசைத் தொழில். | **விதி 45** – ஆரம்பகால குழந்தை பருவ நலன். |
| **விதி 41** – கல்வி, வேலை மற்றும் அரசின் உதவி பெறுதல். | **விதி 43B** – கூட்டுறவு சங்கங்கள். | **விதி 48** – நவீன மற்றும் அறிவியல் அடிப்படையில் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு |
| **விதி 42** – பணிச்சூழல், மகப்பேறு உதவி செய்தல். | **விதி 46** – பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் நலன். | **விதி 48A** – சுற்றுச்சூழல் பாதுகாப்பு வன விலங்கு பாதுகாப்பு |
| **விதி 43** – தொழிலாளர்கள் கூலி, ஓய்வு, பணிப்பாதுகாப்பு. | **விதி 47** – உடல்நல மேம்பாடு, மது போதை பழக்கத்திற்கு தடை. | **விதி 49** – தேசிய நினைவுச் சின்னங்கள், கலாச்சாரம், கலை மற்றும் தொல்லியல் பாதுகாப்பு |
| **விதி 43A** – தொழிற்சாலை நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கேற்பு. | **விதி 48** – கால்நடை பாதுகாப்பு மற்றும் பசுவதை தடை. | **விதி 50** – நிர்வாகத்துறையில் இருந்து நீதித்துறையை பிரித்தல். |
| **விதி 47** – ஊட்டச்சத்து, உடல்நலம் வாழ்க்கை தரம். | | **விதி 51** – பன்னாட்டு அமைதி. |

### விதி 36

- அரசு என்பதன் வரையறை, விதி 12 –இல் உள்ள **அரசு** பற்றிய அதே விளக்கம்.
- **'அரசு'** என்பது மத்திய அரசு (ம) பாராளுமன்றம், மாநில அரசு (ம) சட்டமன்றம் மற்றும் இந்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகள் போன்றவை.
- அரசு சட்டம் இயற்றும்போது கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைக் கோட்பாடுகளை இவ்விதி விளக்குகின்றது.

### விதி 37

- இந்தப் பகுதியில் உள்ள விதிகளை எந்த **நீதிமன்றத்தாலும் அமல்படுத்த இயலாது.** மேலும், சட்டம் இயற்றும் போது இக்கோட்பாட்டுகளை பின்பற்றுவது **அரசின் கடமையாகும்.**
- **நெறிமுறைக் கோட்பாடுகளின் பயன்பாடு,** அதாவது நெறிமுறைக் கோட்பாடுகளை அரசு சட்டம் இயற்றும்போது நினைவில் கொண்டால் மக்கள் நல அரசு அமையும் என்பதை இவ்விதி குறிப்பிடுகிறது.

| பகுதி - IVA | அடிப்படைக் கடமைகள் (Fundamental Duties) (விதி 51 A) |
|---|---|
| விதி 51 – A (a) | அரசியலமைப்பின் படி நடந்து கொள்ளுதல் மற்றும் அதன் நோக்கங்களை மதித்தல் வேண்டும்.மேலும் தேசியக் கொடி ,தேசியச் சின்னங்கள் மற்றும் தேசிய கீதத்தினை மதித்தல் வேண்டும். |
| விதி 51 – A (b) | நமது சுதந்திரப் போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்த உயர்ந்த கொள்கைகளைப் போற்றி வளர்த்துப் பின்பற்ற வேண்டும். |
| விதி 51 – A (c) | தேசத்தின் இறையாண்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை பாதுகாத்தல். |
| விதி 51 – A (d) | தேவைப்படும் போதெல்லாம் நாட்டை பாதுகாக்கவும், தேசிய சேவை செய்யவும் வேண்டும். |
| விதி 51 – A (e) | மதம், மொழி மற்றும் சாதிய வேறுபாட்டை களைந்து இந்திய மக்கள் எல்லோரிடமும் சகோதர உணர்வையும்,நல்லிணக்கத்தையும் வளர்த்தல் மற்றும் பெண்களின் கண்ணியத்தைக் குறைக்கின்ற செயல்களை கைவிட வேண்டும். |
| விதி 51 – A (f) | நமது பண்பாட்டின் சிறப்புமிக்க பாரம்பரியத்தைப் போற்றிப் பாதுகாத்தல், நாட்டின் வேற்றுமையில் ஒற்றுமைக்கு மதிப்பளித்தல். |
| விதி 51 – A (g) | காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்கு உள்ளிட்ட இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல். |
| விதி 51 – A (h) | அறிவியல் மனப்பான்மை,மனிதாபிமானம், பகுத்தறிவு சிந்தனை முதலியவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும். |
| விதி 51 – A (i) | பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் வன்முறையைக் கைவிடுதல். |
| விதி 51 – A (j) | நம் நாடு பல முன்னேற்றங்களைக் காணவும், சாதனைகளைப் படைக்கவும் தனிமனித மற்றும் கூட்டு முயற்சிகள் அனைத்திலும் சிறப்பாகச் செயல்பட வேண்டும். |
| விதி 51 – A (k) | 6 – 14 வயது வரையுள்ள குழந்தைகளுக்குக் கல்வி வழங்குவது பெற்றோர் அல்லது பாதுகாவலரின் கடமை ஆகும். (2002, 86 வது சட்ட திருத்தத்தின் படி சேர்க்கப்பட்டது) |


## அடிப்படை கடமையின் முக்கியத்துவம்

- முற்போக்கு சமுதாயத்துக்கான முன் தேவைகளே அடிப்படை கடமைகள் ஆகும்.
- சில அறம் சார்ந்தவை, பல குடியியல் சார்ந்தவை.
- தனி மனித (ம) பொது வாழ்க்கை ஒழுக்கம் பற்றியது. மேலும் அரசியல், பொருளாதார மற்றும் சமுதாய அறம் காப்பது.
- பார்வையாளர்களாக இருப்போரைப் பொதுப் பணிகளில் பங்கேற்பவர்களாக மாற்ற ஊக்கப்படுத்துகிறது.
- கடமை உணர்வுமிக்க குடிமக்களை உற்சாகப்படுத்தக் கூடியது.
- அடிப்படை உரிமைகளை அனுபவிக்கும் குடிமக்களுக்கு அவர்களின் கடமைகளை பற்றி நினைவூட்டக் கூடியவை.
- தேசியக் கொடியை எரித்தல், பொதுச் சொத்தை சேதப்படுத்தி அழித்தல், வன்முறையில் ஈடுபடுதல். போன்றவற்றில் ஈடுபடும் சமூக விரோத சக்திகளை எச்சரிக்கிறது.

## அடிப்படைக் கடமைகளின் செயல்பாட்டுத்தன்மை

- அடிப்படைக் கடமைகள் தனிப்பட்ட குடிமகனின் கடமையாகும். அதனால், இதனை செயலுறுத்தும் நீதிப்பேராணைகள் (Mandamus) மூலம் வலியுறுத்த முடியாது. (நீதிமன்ற விசாரணைக்கு உட்பட்டதல்ல)
- அடிப்படைக் கடமைகளை ஒரு குடிமகன் நிறைவேற்றாத போது அவரின் மீது வழக்கு தொடர இயலாது. ஏனெனில் அடிப்படைக் கடமைகள் நீதிமன்ற விசாரணைக்கு அப்பாற்பட்டதாகும்.
- சட்டத்தின் வாயிலாக மட்டுமே நிலைநாட்டப்படுகிறது.

# 09 மத்திய அரசு




## மத்திய அரசு (Central Government):

- இந்திய நாட்டின் மிக உயர்ந்த அரசாங்க அமைப்பு மத்திய அரசு ஆகும்.
- இதன் தலைமையகம் புதுடெல்லியில் அமைந்துள்ளது.
- இந்திய அரசியலமைப்பின் பகுதி V-ல் விதிகள் 52 – 151 வரை மத்திய அரசு பற்றி கூறுகிறது.
- மத்திய அரசு 3 அங்கங்களை உடையது. அவை
  1. சட்டமன்றம் (Legislative)
  2. நிர்வாகம் (Executive)
  3. நீதித்துறை (Judiciary)

| மத்திய அரசானது 5 இயல்களைக் கொண்டது. | |
|---|---|
| இயல் 01 | மத்திய நிர்வாகம் (விதி 52 – 78) |
| இயல் 02 | நாடாளுமன்றம் (விதி 79 – 122) |
| இயல் 03 | குடியரசுத் தலைவரின் அவசரச் சட்டம் (விதி 123) |
| இயல் 04 | உச்சநீதிமன்றம் (விதி 124 – 147) |
| இயல் 05 | இந்திய அரசின் தலைமை தணிக்கை அதிகாரி (விதி 148 – 151) |

> ✍ ''சட்டங்களின் உணர்வு'' என்ற நூலில் "மாண்டெஸ்கியூ" என்பவர் அதிகாரப்பிரிவினை கோட்பாட்டை முதன் முதலாகக் கூறினார்.

- மக்களாட்சி அரசாங்க முறையில் அதிகாரப் பிரிவினை என்பது மிக முக்கியமான ஒன்றாகும்.
- அதிகார பிரிவினை என்பது சட்டம் இயற்றும் அதிகாரம், அந்த சட்டத்தை நிர்வகிக்கும் அதிகாரம், நீதித்துறை அதிகாரம் ஆகிய மூன்றும் வெவ்வேறு அமைப்புகளில் இருக்க வேண்டும் என்பது ஆகும்.
- இந்திய அரசியலமைப்பு அதிகாரங்களை சட்டமன்றம், நிர்வாகம், நீதித்துறை இடையே கிடைமட்டமாக (Horizontal) பகிர்ந்து வழங்குகிறது.

## இந்திய குடியரசுத் தலைவர்களின் சிறப்புகள்

| வ. எண் | இந்திய குடியரசுத் தலைவர்களின் பெயர்கள் | பதவிக் காலம் | சிறப்புகள் |
|---|---|---|---|
| 1 | டாக்டர் இராஜேந்திர பிரசாத் | 1950 - 1962 | ✎ அதிக ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர் (99.35%)<br>✎ நீண்ட காலம் குடியரசுத்தலைவராக இருந்தவர். |
| 2 | டாக்டர் R. ராதாகிருஷ்ணன் | 1962 - 1967 | ✎ தமிழ்நாட்டைச் சார்ந்த முதல் குடியரசுத்தலைவர் |
| 3 | டாக்டர் ஜாகீர் உசேன் | 1967 - 1969 | ✎ இந்தியாவின் முதல் முஸ்லீம் குடியரசுத்தலைவர்<br>✎ பதவியிலிருக்கும் போது காலமான முதல் குடியரசுத் தலைவர். |
| | வி.வி.கிரி (தற்காலிகம்) | 03.05.1969 - 20.07.1969 | ✎ இந்தியாவின் முதலாவது செயல்படும் குடியரசுத்தலைவர் |
| | முகம்மது ஹிதயத்துல்லா (தற்காலிகம்) | 20.07.1969 - 24.08.1969 | ✎ இடைக்கால குடியரசுத் தலைவராக பதவி வகித்துள்ள முதல் இந்தியத் தலைமை நீதிபதி |
| 4 | வி.வி.கிரி | 1969 - 1974 | ✎ மிகக்குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர். (50.22 %) |
| 5 | பக்ருதீன் அலி அகமது | 1974 - 1977 | ✎ அவசர நிலைப் பிரகடனம் கொண்டுவரப்பட்டது. |
| | பி.டி.ஜாட்டி (தற்காலிகம்) | 11.02.1977 - 25.07.1977 | ✎ 2 வது செயல்படும் குடியரசுத் தலைவர் |
| 6 | நீலம் சஞ்சீவ ரெட்டி | 1977 - 1982 | ✎ போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் குடியரசுத்தலைவர்.<br>✎ இளம் குடியரசுத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர். (64 வயது) |
| 7 | கியானி ஜெயில்சிங் | 1982 - 1987 | ✎ முதல் சீக்கிய குடியரசுத்தலைவர். |
| 8 | ஆர்.வெங்கட்ராமன் | 1987 - 1992 | ✎ வயதான குடியரசுத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர். (76 வயது) |
| 9 | டாக்டர். சங்கர் தயாள் சர்மா | 1992 - 1997 | |
| 10 | டாக்டர். கே.ஆர்.நாராயணன் | 1997 - 2002 | ✎ தலித் இனத்தைச் சேர்ந்த முதல் குடியரசுத்தலைவர். |
| 11 | டாக்டர்.ஏ.பி.ஜே. அப்துல் கலாம் | 2002 - 2007 | ✎ முதல் அறிவியல் விஞ்ஞானி. |
| 12 | பிரதீபா பாட்டில் | 2007 - 2012 | ✎ இந்தியாவின் முதல் பெண் குடியரசுத்தலைவர் |
| 13 | பிரணாப் முகர்ஜி | 2012 - 2017 | |
| 14 | ராம்நாத் கோவிந்த் | 2017 - 2022 | ✎ 2 வது தலித் குடியரசுத் தலைவர் |
| 15 | திரௌபதி முர்மு | 25.07.2022 முதல் | ✎ இந்தியாவின் முதல் பழங்குடியின குடியரசுத்தலைவர் (சாந்தால் இனம்) |

## 9.3 பிரதமர்

**இந்தியப் பிரதமர்**



- இந்திய அரசாங்கத்தின் தலைவர்.
- உண்மையான அதிகாரத் தலைவர் (De – facto Executive)
- நாட்டின் உயர்ந்த ஆட்சி அதிகாரம் கொண்டவர்.
- நாடாளுமன்றத்தின் தலைவர்.
- மக்களவையின் தலைவர். (Leader of the Lok Sabha)
- தற்போதைய (2026) பிரதமர் – **திரு. நரேந்திரமோடி**

| முக்கிய விதிகள் | |
|---|---|
| **விதி 74** | குடியரசுத் தலைவர் தனக்கு ஆலோசனை உதவி புரிய பிரதமர் தலைமையிலான அமைச்சரவையை நியமிக்கிறார். அமைச்சரவையின் ஆலோசனையின் படி குடியரசுத்தலைவர் செயல்படுவார்.<br>அமைச்சரவையின் ஆலோசனையை எந்த நீதிமன்றத்திலும் விசாரிக்க முடியாது. |
| **விதி 75** | குடியரசுத் தலைவரால் பிரதமர் நியமனம் |
| **விதி 76** | இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் (Attorney general of India) |
| **விதி 77** | மத்திய அரசாங்கத்தின் அலுவல் நடைமுறை |
| **விதி 78** | குடியரசுத் தலைவருக்கும் தகவல் அளிப்பது பிரதமரின் கடமை |
| பிரதமருக்கும் குடியரசுத் தலைவருக்கும் இடையேயான உறவுகள் பற்றி விதிகள் 74,75, 78 கூறுகிறது. | |

### பிரதம அமைச்சர் (Prime Minister) :

- பிரதமர் பாராளுமன்ற முறை அரசாங்கத்தின் உண்மையான நிர்வாகத் தலைவராகத் திகழ்கிறார்.
- பிரதமர் அவர்கள் அமைச்சரவைக் குழுவின் மேல் வளைவின் அடித்தளக்கல் (Key – Stone of the cabinet Arch) என்று அழைக்கப்படுகிறார்.
- அமைச்சரவையின் சமமானவர்களில் முதன்மையானவராக பிரதமர் திகழ்கிறார்.

### பிரதமராவதற்கான தகுதிகள் (Qualifications of Prime Minister) :

- இந்திய அரசியலமைப்பில் விதி 84ல் பாராளுமன்ற உறுப்பினர்களின் முக்கிய தகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.
- விதி 75-ல் அமைச்சரவை உறுப்பினர்களின் தகுதிகள் மற்றும் பிரதமரின் நிலைப்பாடு போன்றவை குறிப்பிடப்படுகின்றன.
  - ✓ இந்திய குடிமகனாக இருக்க வேண்டும்.
  - ✓ பிரதமராக தேர்ந்தெடுக்கும் பொழுது மக்களவை உறுப்பினராகவோ அல்லது மாநிலங்களவை உறுப்பினராகவோ இருத்தல் வேண்டும்.
  - ✓ மாநிலங்களவை உறுப்பினராக இருந்தால் 30 வயது முடிந்திருக்க வேண்டும்.
  - ✓ மக்களவை உறுப்பினராக இருந்தால் 25 வயது முடிந்திருக்க வேண்டும்.

## இந்திய நாடாளுமன்றம் (Parliament of India) :

- அரசியலமைப்பின் பகுதி V-ல், விதிகள் 79 - 123 வரை பாராளுமன்றம் பற்றிக் கூறுகிறது.
- இந்தியப் பாராளுமன்றம், இங்கிலாந்தின் **வெஸ்ட்மினிஸ்டர் மாதிரி**யை (Westminster Model) அடிப்படையாகக் கொண்டது.
- இந்தியப் பாராளுமன்றம் என்பது **மத்திய அரசின் சட்டம் இயற்றும் பிரிவு** ஆகும்.
- நாட்டின் முடிவுகளை எடுக்கக்கூடிய உச்ச அமைப்பு ஆகும்.
- மக்களாட்சியின் அடையாளமாகத் திகழ்கிறது.
- **நோக்கம் :** நாடாளுமன்றம் அதன் உறுப்பினர்களை பதிலளிக்க கடமைப்பட்டவர்களாகவும், நாட்டில் உள்ள மக்களின் நலன்களுக்கு பொறுப்புடையவர்களாக செய்தல்.
- நாடாளுமன்றம் என்பது குடியரசுத் தலைவர், மாநிலங்களவை மற்றும் மக்களவை ஆகியவற்றை உள்ளடக்கியது. **(விதி 79)**
- நாடாளுமன்றம் ஈரவைகளை கொண்டது. அவை மக்களவை (லோக் சபா) மற்றும் மாநிலங்களவை (ராஜ்ய சபா) ஆகும். இந்திய நாடாளுமன்றம் பிரிட்டிஷ் நாடாளுமன்ற முறை மற்றும் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் ஈரவை முறையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது.
- நாட்டு மக்களின் நலன்சார்ந்த பிரச்சனைகள் மீதான விவாதத்திற்கும், அரசியலமைப்பில் சட்டங்களை இயற்றுவதற்கும் திருத்துவதற்கும் பதிலளிக்க கடமைப்பட்ட மிகவும் சக்திவாய்ந்த தளமாக திகழ்கிறது.

**இந்திய நாடாளுமன்றம்**

- மாநிலங்களவை (ராஜ்ய சபை)
  - 250 உறுப்பினர்களுக்கு மிகாமல்
    - 12 பேர் இந்தியக் குடியசுரத் தலைவரால் நியமிக்கப் படுகின்றனர்.
    - 238 பேர் மாநில சட்டமன்றங் களினால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.
- குடியரசுத் தலைவர்
- மக்களவை (லோக் சபை)
  - 552 உறுப்பினர்களுக்கு மிகாமல்
    - 530 உறுப்பினர்கள் மாநிலங்களில் இருந்து மக்களால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.
    - 20 பேர் யூனியன் பிரதேசங்களின் பிரதிநிதிகள்
    - 2 ஆங்கிலோ – இந்திய உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரால் நியமிக்கப் படுகின்றனர்.

> 104 வது அரசியலமைப்பு திருத்தம் (2020) ஆங்கிலோ – இந்தியர் நியமனம் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

> தமிழகத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள்
> - மாநிலங்களவை – 18 உறுப்பினர்கள்
> - மக்களவை – 39 உறுப்பினர்கள்

## விதி 153 - மாநில ஆளுநர்கள் (State Governors) :

**ஆளுநர் (Governor) :**

- மாநிலத்தின் முதல் குடிமகன்.
- மாநிலத்தின் தலைமை நிர்வாகி.
- மாநில நிர்வாகத்தின் தலைவர்
- மாநிலத்தின் பெயரளவுத் தலைவர். (De – Jure Executive)
- மாநில அரசின் தலைவர்
- குடியரசுத் தலைவரின் முகவர்.
- மாநில நிர்வாகத்தின் அரசியலமைப்புத் தலைவர். (Constitutional Head of the State)



**ஆர். என். ரவி**

- ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு ஆளுநர் நியமிக்கப்பட வேண்டும். ஆனால் 7-வது சட்டத்திருத்தம் 1956-ன்படி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு ஒரே ஆளுநர் நியமனம் செய்யப்படலாம்.
- தற்போதைய (2026) தமிழக ஆளுநர் – திரு. **R.N**. ரவி
- இந்தியக் கூட்டாட்சி முறையில் இரட்டைத் தன்மையான பங்கினை ஆளுநர் பதவிக்கு அரசியலமைப்பு வழங்கியுள்ளது. அவை

**இரட்டைப் பணி**
**Dual Role**

| மத்திய அரசின் முகவர் / பிரதிநிதி **Agent of Central Government** | மாநிலத்தின் பெயரளவு மற்றும் நிர்வாகத் தலைவர் **Nominal Executive Head of State** |
|---|---|

**P.V. இராஜமன்னார் கமிட்டி (1969)**

- ஆளுநர் மத்திய அரசின் முகவராக தன்னைக் கருதாமல் மாநில அரசின் அரசியலமைப்புத் தலைவராகப் பணியாற்ற வேண்டும்.

## விதி 154 - ஆளுநரின் நிர்வாக அதிகாரம் (Executive Power of Governor) :

- மாநிலத்தின் நிர்வாக அதிகாரம் ஆளுநரின் கட்டுப்பாட்டில் உள்ளது.
- தனது நிர்வாக அதிகாரத்தை நேரடியாகவோ அல்லது தனக்குக் கீழுள்ள அலுவலரின் வாயிலாகவோ செயலுறுத்துவார். (விதி – 154)
- மாநிலத்தின் அனைத்து செயல்துறை நடவடிக்கைகளும் ஆளுநரின் பெயரில் தான் செயல்படுத்தப்படுகின்றன. (விதி 166(1))

## விதி 155 - ஆளுநரின் நியமனம் (Appointment of Governor) :

- மத்திய அமைச்சரவையின் ஆலோசனைப் படி குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார். (கனடா நாட்டின் மாதிரி)

| திரு. மு.க. ஸ்டாலின் ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டங்கள் | | |
|---|---|---|
| வ.எண் | திட்டத்தின் பெயர் | தொடக்கம் |
| **கல்வி தொடர்புடைய திட்டங்கள்** | | |
| 1. | இல்லம் தேடி கல்வி திட்டம் | அக்டோபர் 27, 2021 - மரக்காணம் |
| 2. | நான் முதல்வன் திட்டம் | மார்ச் 01, 2022 |
| 3. | எண்ணும் எழுத்தும் திட்டம் | ஜுன் 13, 2022 - திருவள்ளூர் |
| 4. | பள்ளி இல்ல நூலக திட்டம் | ஆகஸ்ட் 2022 |
| 5. | தகைசால் பள்ளிகள் திட்டம் | செப்டம்பர் 05, 2022 |
| 6. | முதலமைச்சரின் காலை உணவு திட்டம் | செப்டம்பர் 15, 2022 - மதுரை |
| 7. | மிஷன் இயற்கை திட்டம் | நவம்பர் 28, 2022 |
| 8. | வானவில் மன்றம் | நவம்பர் 28, 2022 - திருச்சி |
| 9. | நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி திட்டம் | டிசம்பர் 19, 2022 |
| 10. | பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் | பிப்ரவரி 01, 2023 - வேலூர் |
| 11. | புன்னகை திட்டம் | மார்ச் 09, 2023 - சென்னை |
| 12. | வாசிப்பு இயக்கம் | ஜுலை 2023 |
| 13. | மணற்கேணி செயலி | ஜுலை 25, 2023 |
| 14. | எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி | செப்டம்பர் 1, 2023 - மதுரை |
| 15. | விழுதுகள் திட்டம் | ஜனவரி 09, 2024 |
| 16. | திறனறித் தேர்வு திட்டம் | ஏப்ரல் 18, 2024 |
| 17. | தமிழ் புதல்வன் திட்டம் | ஆகஸ்ட் 09, 2024 - கோயம்புத்தூர் |
| **பெண்கள் நலத்திட்டங்கள்** | | |
| 18. | விடியல் பயணம் | மே 08, 2021 |
| 19. | புதுமைப்பெண் திட்டம் | செப்டம்பர் 05, 2022 |
| 20. | அவள் திட்டம் | மார்ச், 2023 |
| 21. | கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் | செப்டம்பர் 15, 2023 |
| 22. | தோழி தங்கும் விடுதி | ஜனவரி 04, 2024 |
| **சுகாதாரம் மற்றும் நலவாழ்வு தொடர்பான திட்டங்கள்** | | |
| 23. | மக்களைத் தேடி மருத்துவம் | ஆகஸ்ட் 05, 2021 - கிருஷ்ணகிரி |
| 24. | நட்புடன் உங்களோடு மனநல சேவை | அக்டோபர் 27, 2022 |
| 25. | மனம் திட்டம் | டிசம்பர் 22, 2022 |
| 26. | இதயம் காப்போம் முன்னெடுப்பு | ஜுன் 2023 |
| 27. | மக்களை தேடி ஆய்வக சேவை | பிப்ரவரி 05, 2024 |
| **ஊரக மேம்பாட்டு திட்டங்கள்** | | |
| 28. | நடப்போம் நலம் பெறுவோம் திட்டம் | நவம்பர் 04, 2023 |
| 29. | முதலமைச்சர் தாயுமானவர் வறுமை ஒழிப்பு திட்டம் | பிப்ரவரி 19, 2024 |
| 30. | கனவு இல்லம் | பிப்ரவரி 19, 2024 |
| **தமிழ்நாடு செயல்படுத்தும் காலநிலை மாற்ற திட்டங்கள்** | | |
| 31. | மீண்டும் மஞ்சப்பை இயக்கம் | டிசம்பர் 23, 2021 |
| 32. | தமிழ்நாடு ஈரநிலங்கள் திட்டம் | ஆகஸ்ட், 2022 |
| 33. | பசுமை தமிழ்நாடு திட்டம் | நவம்பர் 28, 2022<br>வண்டலூர், செங்கல்பட்டு |
| 34. | தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் | டிசம்பர் 08, 2022 |
| 35. | வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள் திட்டம் | ஜனவரி 16, 2023,<br>வள்ளுவர் கோட்டம், சென்னை |
| 36. | நீலகிரி வரையாடு வளங்காப்பு திட்டம் | அக்டோபர் 12, 2023 |
| 37. | டால்பின் வளங்காப்பு திட்டம் | நவம்பர் 06, 2023 |

## உச்ச நீதிமன்றம் (Supreme Court) :



- விதிகள் 124 – 147 வரை இந்திய உச்ச நீதிமன்றத்தின் வடிவம் மற்றும் அதிகார வரம்புகள் பற்றி கூறுகின்றன.
- உச்ச நீதிமன்றமானது இந்திய அரசியலமைப்பு பகுதி-**V**, அத்தியாயம் 4 மூலம் நிறுவப்பட்டுள்ளது.
- அக்டோபர் 10, 1949-ம் ஆண்டு வரை பிரிட்டிஷ் பிரிவு கவுன்சில் தான் இந்தியாவின் உச்ச நீதிமன்றமாகச் செயல்பட்டு வந்தது.
- விதி – 124 (1) ன் படி இந்தியாவில் உச்ச நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது.
- **ஜனவரி 28, 1950-ல்** உருவாக்கப்பட்டது.
- புதுடெல்லியில் அமைந்துள்ளது.



- தொடக்கத்தில் நாடாளுமன்றத்தின் இளவரசர்கள் மாடத்தில் செயல்பட்டது. 1958ம் ஆண்டு தற்போது உள்ள வளாகத்திற்கு மாற்றப்பட்டது.
- உச்ச நீதிமன்றத்தின் இருப்பிடத்தை மாற்றும் அதிகாரத்தை தலைமை நீதிபதி பெற்றுள்ளார். ஆனால் இருப்பிடத்தை மாற்றும் முன் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற வேண்டும்.
- தற்போதைய 53வது உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி – சூர்யகாந்த் (24.11.2025 முதல்)

<table>
<tr><th colspan="2">உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை</th></tr>
<tr><td colspan="2">✍ உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்தும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு உள்ளது.</td></tr>
<tr><td colspan="2">✍ உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் மொத்த எண்ணிக்கை – 34 (1+33)</td></tr>
<tr><td colspan="2">✍ ஆரம்பத்தில் 1 தலைமை நீதிபதி மற்றும் 7 பிற நீதிபதிகள் இருந்தனர்.</td></tr>
<tr><th>உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை சட்டம் திருத்தம் செய்யப்பட்ட ஆண்டு.</th><th>தலைமை நீதிபதி + பிற நீதிபதிகளின் எண்ணிக்கை</th></tr>
<tr><td>1956</td><td>1 + 10</td></tr>
<tr><td>1960</td><td>1 + 13</td></tr>
<tr><td>1976</td><td>1 + 17</td></tr>
<tr><td>1986</td><td>1 + 25</td></tr>
<tr><td>2009</td><td>1 + 30</td></tr>
<tr><td>2019</td><td>1 + 33</td></tr>
</table>

## உச்ச நீதிமன்றத்தின் சிறப்புக் கூறுகள்
## (Special Features of Supreme Court)

- மத்திய அரசின் 3வது அங்கம்.
- மக்களாட்சியின் 3வது தூண்.
- இந்தியாவின் மிக உயர்ந்த நீதிமன்றம்.
- கூட்டாட்சி நீதிமன்றத்தின் தலைமை அமைப்பாக திகழ்கிறது.
- நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட நீதிமன்ற அமைப்பாகும்.
- இறுதி மேல்முறையீட்டு நீதிமன்றம்.
- அரசியலமைப்புச் சட்டம் பற்றிய இதன் விளக்கமே இறுதியானது.
- அரசியலமைப்புச் சட்டம் மற்றும் அடிப்படை உரிமைகளின் பாதுகாவலன்
- மத்திய – மாநில அரசுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் மேற்பார்வையாளர்.

**யூனியன் பிரதேசங்களின் தோற்றம் (Creation of Union Territories) :**

- 1874ல் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் சில பகுதிகள் பட்டியலிடப்பட்ட மாவட்டங்கள் (Scheduled districts) என அழைக்கப்பட்டன. பின்பு அவை முதன்மை ஆணையர் மாகாணங்கள் (Chief Commissioners Provinces) என அழைக்கப்பட்டன.
- சுதந்திரத்திற்குப் பின்பு முதன்மை ஆணையர் மாகாணங்கள் பகுதி C மற்றும் D மாநிலங்களில் வகைப்படுத்தப்பட்டன. பகுதி C மற்றும் D மாநிலங்கள் மாநில மறுசீரமைப்புச் சட்டம் – 1956ன் –படி (7வது சட்டத்திருத்தம்) யூனியன் பிரதேசங்களாக மாற்றப்பட்டன.

| வ. எண் | யூனியன் பிரதேசங்களின் பெயர்கள் | தலைநகரங்கள் | உருவான ஆண்டு | சட்டத்திருத்தம் |
|---|---|---|---|---|
| 1. | அந்தமான் & நிக்கோபார் தீவுகள் | போர்ட் பிளேயர் (ஸ்ரீ விஜயபுரம்) | நவம்பர் 01, 1956 | 7 வது சட்டதிருத்தம் |
| 2. | டெல்லி | டெல்லி | | |
| 3. | லட்சத்தீவுகள் | கவராத்தி | | |
| | தாத்ரா & நாகர் ஹவேலி | தாத்ரா & நாகர் | 1961 | 10 வது சட்டதிருத்தம் |
| | டையூ & டாமன் | டாமன் | 1962 | 12 வது சட்டதிருத்தம் |
| 4. | புதுச்சேரி | புதுச்சேரி | 1962 | 14 வது சட்டதிருத்தம் |
| 5. | சண்டிகர் (ஷா குழு பரிந்துரை) | சண்டிகர் | 1966 | 18வது சட்டதிருத்தம் |
| 6. | ஜம்மு காஷ்மீர் | ஸ்ரீ நகர் (கோடை காலம்)<br>ஜம்மு (குளிர் காலம்) | 2019 | ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டம் 2019 |
| 7. | லடாக் | லே (கோடை காலம்)<br>கார்கில் (குளிர் காலம்) | | |
| 8. | தாத்ரா & நாகர் ஹவேலி மற்றும் டையூ & டாமன் | டாமன் | ஜனவரி 26, 2020 | யூனியன் பிரதேசங்கள் ஒன்றிணைப்பு சட்டம் 2019 |

| யூனியன் பிரதேசங்கள் உருவான காரணங்கள் | |
|---|---|
| அரசியல் மற்றும் நிர்வாக காரணங்கள் | டெல்லி<br>சண்டிகர் |
| கலாச்சார தனித்தன்மை | புதுச்சேரி<br>தாத்ரா & நாகர் ஹவேலி மற்றும் டையூ & டாமன் |
| கேந்திர முக்கியத்துவம் | அந்தமான் & நிக்கோபார் தீவுகள்<br>லட்சத் தீவுகள். |
| பழங்குடியினர் சிறப்பு அந்தஸ்து (தற்போது மாநிலங்களாக உள்ளன) | மிசோரம்<br>மணிப்பூர்<br>திரிபுரா<br>அருணாச்சலப் பிரதேசம் |

**யூனியன் பிரதேசங்களாக இருந்த 6 மாநிலங்கள்**

| | | |
|---|---|---|
| 1. இமாச்சல பிரதேசம் | 2. மணிப்பூர் | 3. திரிபுரா |
| 4. மிசோரம் | 5. அருணாச்சல பிரதேசம் | 6. கோவா |

# 13.3 பஞ்சாயத்து ராஜ் மற்றும் 73-வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம்

| பகுதி – IX | விதி 243 – 243 O |
|---|---|

- இந்தியாவில் கிராம உள்ளாட்சி அரசாங்கங்கள் பஞ்சாயத்து செய்கிற (ஆழ்ந்து விவாதித்தல் மற்றும் பேச்சுவார்த்தை நடத்துதல்) இடமாக கருதப்படுவதால் 'பஞ்சாயத்து ராஜ்' என்ற பொது பெயரில் அழைக்கப்படுகின்றன.
- கிராமப்புற வளர்ச்சிக்கான இந்திய நிர்வாகத்தின் மூன்றடுக்கு அமைப்பு முறை "பஞ்சாயத்து ராஜ்" ஆகும். மேலும் பஞ்சாயத்து ராஜ் என்ற சொல் உள்ளூர் கிராம சுயாட்சியை வலியுறுத்துகிறது.

✍ தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம் – **ஏப்ரல் 24**

- **பஞ்சாயத்து ராஜ் – நோக்கம் :**
  - ✓ மாவட்டங்கள், மண்டலங்கள் மற்றும் கிராமங்களில் உள்ளாட்சி சுயராஜ்ஜியங்களை மேம்படுத்துவது.
  - ✓ கிராமப்புற வளர்ச்சி
- விதி 40 – "அரசு கிராம பஞ்சாயத்துகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அவைகள் சுய ஆட்சியின் அலகுகளாக பணிபுரிய தேவையான அதிகாரங்களையும், திறன்களையும் வழங்க வேண்டும்'' (ஷர்மா நாராயணன் – காந்திய கொள்கையை உருவாக்கியவர்)
- விதி 246 – மாநில சட்டமன்றம் உள்ளூர் சுயராஜ்ஜியம் தொடர்பான எந்தவொரு சட்டத்தையும் இயற்றலாம்.
- **பஞ்சாயத்து ராஜ் – சிறப்பம்சங்கள் :**
  - ✓ கிராம சபை அமைத்தல்
  - ✓ மூன்றடுக்கு ஊராட்சி அமைப்பு
  - ✓ இடஒதுக்கீடு
  - ✓ தேர்தல்
  - ✓ பதவிக்காலம்
  - ✓ நிதிக்குழு
  - ✓ கணக்கு மற்றும் தணிக்கை

| பஞ்சாயத்து ராஜ் அமைப்பின் வேறுபெயர்கள் | |
|---|---|
| மத்திய இந்தியா | பஞ்ச மண்டலிகள் |
| பீகார் | கிராம ஜன பாதங்கள் |
| இராஜஸ்தான் | பஞ்ச குலங்கள் |

✍ மதராஸ் கிராம பஞ்சாயத்து சட்டம் – 1950
✍ மதராஸ் பஞ்சாயத்து சட்டம் – 1958
✍ மதராஸ் மாவட்ட வளர்ச்சி கவுன்சில் சட்டம் – 1958
✍ கிராம நியாயாலயா சட்டம் – 2008
(02.10.2009 ல் நடைமுறைப்படுத்தப்பட்டது)

**பஞ்சாயத்து ராஜ் அமைப்பு இல்லாத மாநிலங்கள்**

1. டெல்லி
2. நாகலாந்து
3. மிசோரம்
4. மேகாலயா

| பட்டியல் வாரியான துறைகள் | | |
|---|---|---|
| **மத்தியப் பட்டியல் (100)** | **மாநிலப் பட்டியல் (61)** | **பொதுப் பட்டியல் (52)** |
| பாதுகாப்பு | விவசாயம் | கல்வி |
| அணுசக்தி | காவல்துறை | அளவைகள் மற்றும் எடைகள் |
| வெளிநாட்டு விவகாரம் | சிறைச்சாலை | வனத்துறை |
| வங்கி சேவை | உள்ளாட்சி அரசாங்கம் | தொழிற்சங்கங்கள் |
| இரயில்வே துறை | பொது சுகாதாரம் | கலப்படம் |
| அஞ்சல் மற்றும் தந்தி | நிலம் | தத்தெடுப்பு (ம) வாரிசு தொடர்ச்சி |
| துறைமுகங்கள் | மது | நீதித்துறை நிர்வாகம் |
| வான்வழிகள் | வர்த்தகம் மற்றும் வணிகம் | காட்டு விலங்குகள் மற்றும் பறவைகளைப் பாதுகாத்தல் |
| பணம் மற்றும் நாணயம் | கால்நடை மற்றும் கால்நடை வளர்ப்பு | குற்றவியல் சட்ட நடைமுறை |
| வெளிநாட்டு வர்த்தகம் | மாநில பொதுப்பணிகள் | உரிமையியல் சட்ட நடைமுறை |
| போர் மற்றும் அமைதி | மீன்பிடிப்பு | திருமணம் மற்றும் விவாகரத்து |
| உடன்படிக்கை | காடுகள் சார்ந்த | மின்சாரம் |
| வருமான வரி | தொழிற்சாலைகள் | செய்தித்தாள் |
| ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வரி | பொது அமைதி | பத்திரக் கட்டணம் |
| | | மருந்து நச்சுகள் |

- 42 வது சட்டதிருத்தம் 1976ன் படி மாநில பட்டியலில் இருந்து 5 துறைகள் பொதுப்பட்டியலில் சேர்க்கப்பட்டது. அவைகள்
    1. கல்வி
    2. காடுகள்
    3. அளவைகள் மற்றும் எடைகள்
    4. நீதித்துறை நிர்வாகம்
    5. காட்டு விலங்குகள், பறவைகளைப் பாதுகாத்தல்

## விதி 248 - எஞ்சிய துறைகள் (Residuary Powers) :

- மத்தியப் பட்டியல், மாநிலப் பட்டியல் மற்றும் பொதுப் பட்டியல் ஆகியவற்றில் இடம்பெறாத துறைகள் அனைத்தும் எஞ்சிய துறைகள் என அழைக்கப்படுகின்றது.
- எஞ்சிய துறைகள் அனைத்தும் நாடாளுமன்றத்திடமே உள்ளன.
- இத்துறைகளின் மீது சட்டமியற்றும் அதிகாரத்தை பாராளுமன்றம் மட்டுமே பெற்றுள்ளது. (இக்கருத்தாக்கம் இந்திய அரசுச் சட்டம் 1935 லிருந்து பெறப்பட்டது.)

## மாநிலப் பட்டியலில் நாடாளுமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரம் (Parliament Legislation in the State field) :

- பின்வரும் சூழ்நிலைகளின் போது மாநிலப் பட்டியலில் உள்ள துறைகள் மீது பாராளுமன்றம் சட்டம் இயற்றுகிறது. அவை
    1. தேசிய நலனுக்காக (விதி 249)
    2. தேசிய நெருக்கடி நிலையின் போது (விதி 250)
    3. மாநிலங்களுக்கிடையேயான ஒப்பந்தத்தின் மூலம் (விதி 252)
    4. சர்வதேச ஒப்பந்தங்களின் காரணமாக (விதி 253)
    5. மாநில நெருக்கடி நிலையில் (விதி 356)

## பொதுப்பணிகளின் வகைகள்

- இந்தியாவில் 3 வகையான பொதுப்பணிகள் உள்ளன.
  1. அகில இந்திய பணிகள்.
  2. மத்திய பணிகள்.
  3. மாநிலப் பணிகள்.

### I. விதி 312 - அகில இந்தியப் பணிகள் (All India Service) :

- அனைத்திந்திய அரசுப் பணிகளை உருவாக்கவும், ஒழுங்குபடுத்தவும் நாடாளுமன்றத்திற்கு மட்டுமே அதிகாரம் உள்ளது. **அனைத்திந்திய பணிகள் சட்டம் 1951**ன் மூலம் அனைத்திந்திய பணிகளுக்கான நியமன விதிமுறைகள் மற்றும் பணி நிலைமைகள் குறித்து மத்திய அரசு விதிமுறைகளை உருவாக்கலாம்.
- அனைத்திந்திய அரசுப் பணிகளை உருவாக்க மாநிலங்களவையில் 2/3 பங்கிற்கு குறைவில்லாத உறுப்பினர்களால் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.
- இவர்கள் எந்த நேரத்திலும் எந்த அரசுப் பணிக்கும் மாற்றப்படலாம்.
- இந்த அலுவலர்கள் அனைத்திந்திய அளவில் நியமிக்கப்படுகிறார்கள். ஆனால் பொது தகுதியும் ஒரே ஊதிய விகிதமும் கொண்டவை. இவர்கள் ஊதியம் மாநிலத்துக்கு மாநிலம் மாறுவதில்லை.
- அகில இந்திய பணி என்பது மத்திய மற்றும் மாநில அரசில் பணி புரிவதாகும். அவை
  1. இந்திய ஆட்சி பணி (Indian Administrative Service)
  2. இந்தியக் காவல் பணி (Indian Police Service)
  3. இந்திய வனப் பணி (Indian Forest Service)

#### 1. இந்திய ஆட்சிப் பணி (IAS)

- இவர்களுக்கான ஊதியம், ஓய்வூதியம் மாநில அரசால் வழங்கப்படும்.
- இவர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கும் அதிகாரம் மற்றும் அபராதம் விதிக்கும் அதிகாரம் மத்திய அரசிடமே உள்ளது. இவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆலோசனையின்படி மத்திய அரசால் மட்டுமே எடுக்கப்படுகிறது.

#### 2. இந்தியக் காவல் பணி (IPS)

- இந்தியக் காவல் பணியானது, மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் கீழ் மேற்பார்வையிடப்படுகிறது.
- இந்தியக் காவல் பணியானது, சுதந்திர காலக்கட்டத்திற்கு முன்பே தோன்றியது இப்பணி இந்திய ஆட்சிப் பணியிலிருந்து இரண்டு வழிகளில் வேறுபடுகிறது.
  - ✓ பெரும்பான்மையான அதிகாரிகள் மாநிலத்திலேயே பணிபுரிகின்றனர். ஏனெனில், மத்தியில் காவல் துறை சார்ந்த மிகச் சில பணிகளே உள்ளன.
  - ✓ இவர்களின் ஊதியம் மற்றும் நிலை இந்திய ஆட்சிப் பணியைவிடக் குறைவானது.
- இவர்கள் சர்தார் வல்லபாய் பட்டேல் தேசிய காவல் பயிற்சி நிலையத்தில் (ஹைதராபாத்) சிறப்பு பயிற்சி பெறுகிறார்கள்.

#### 3. இந்திய வனப் பணி (IFS)

- **நாடாளுமன்றச் சட்டம் 1963** ன் கீழ் **இந்திய வனப்பணி 1966ல்** உருவாக்கப்பட்டது.
- விடுதலைக்கு பின்னர் உருவாக்கப்பட்ட ஒரே அனைத்திந்திய பணி இந்திய வனப்பணி ஆகும்.
- இதன் ஊதியம் மற்றும் பணி தகுதி மற்ற இரு பணிகளுக்கும் (இந்திய ஆட்சிப்பணி மற்றும் இந்தியக் காவல் பணி) அடுத்த நிலையில் உள்ளது.
- இப்பணிகள் பணியாளர் மற்றும் சீர்திருத்தத்துறை மூலம் நிர்வகிக்கப்படுகின்றன.
- இவர்கள் டேராடூனில் உள்ள இந்திய வனத்துறை பயிற்சி மையத்தில் தகுதிகாண் (Probationary Training) பயிற்சிகளை இரண்டு ஆண்டுகள் மேற்கொள்ள வேண்டும்.

## 20.2 தேசிய கட்சிகள் மற்றும் மாநில கட்சிகளின் அங்கீகாரம்

**தேசியக் கட்சி (National Party) :**

- பாராளுமன்ற பொதுத்தேர்தல் (அல்லது) மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் 4 அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் 6% செல்லத்தகுந்த வாக்குகளை பெறுதல் மற்றும் ஒரு மாநிலத்திலோ (அல்லது) பல மாநிலத்திலோ 4 மக்களவை உறுப்பினர்களை பெற்றிருக்க வேண்டும்.
- மக்களவைத் தேர்தலில் 4 மாநிலங்களில் சேர்த்து 2% உறுப்பினர்களை பெற்றிருக்க வேண்டும்.
- 4 மாநிலங்களில் மாநில கட்சி அந்தஸ்து பெற்றிருக்க வேண்டும்.
- மேற்கண்டவற்றில் ஏதேனும் ஒரு தகுதியை பெற்றுள்ள கட்சியைத் தேர்தல் ஆணையம் தேசியக்கட்சியாக அங்கீகரிக்கும்.
- இந்தியாவில் தற்போதைய நிலவரப்படி 6 கட்சிகள் தேசியக்கட்சிகளாக உள்ளது. (நவம்பர் 2023 நிலவரப்படி)

| இந்தியாவிலுள்ள தேசியக் கட்சிகள் (National Parties in India) | | | |
|---|---|---|---|
| **கட்சியின் பெயர்** | **ஆண்டு** | **சின்னம்** | **நிறுவனர்** |
| **இந்திய தேசிய காங்கிரஸ்** | 1885 | கை | ஆலன் ஆக்டோவியன் ஹியூம் |
| **இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)** | 1964 | சுத்தியல், கதிர் அரிவாள், நட்சத்திரம் | முக்கியமானவர் – நம்பூதிரிபட் |
| **பாரதிய ஜனதா கட்சி** | 1980 | தாமரை | முக்கியமானவர் –அடல்பிகாரி வாஜ்பாய் |
| **பகுஜன் சமாஜ் கட்சி** | 1984 | யானை | கன்ஷி ராம் |
| **ஆம் ஆத்மி கட்சி** | 2012 | துடைப்பம் | அரவிந்த் கெஜ்ரிவால் |
| **தேசிய மக்கள் கட்சி** | 2013 | புத்தகம் | பி.ஏ. சங்மா |
| பாரதிய ஜன சங்கம் எனும் அமைப்பு பாரதிய ஜனதா கட்சியாக உருமாற்றம் அடைந்தது. | | | |

**மாநில கட்சிகள் (State Parties) :**

- சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் 6% வாக்குகளை பெற்று 2 இடங்களில் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.
- மக்களவைத் தேர்தலில் அம்மாநிலத்தில் 6% வாக்குகளை பெற்று 1 மக்களவை தொகுதியில் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.
- சட்டப்பேரவை தேர்தலில் அம்மாநிலத்தில் 3% வாக்குகளை பெற்று 3 இடங்களில் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.
- ஒவ்வொரு 25 மக்களவை இடங்களுக்கு 1 இடம் வீதம் அம்மாநிலத்தில் பெற்றிருக்க வேண்டும்.
- மக்களவை தேர்தலிலோ (அல்லது) மாநில சட்டமன்றத் தேர்தலிலோ 8% வாக்குகளை பெற்றிருக்க வேண்டும். (இந்த நிபந்தனை 2011ல் சேர்க்கப்பட்டது)
- மேற்கண்டவற்றில் ஏதேனும் ஒரு தகுதியை பெற்ற கட்சியை மாநில கட்சியாக தேர்தல் ஆணையம் அங்கீகரிக்கும்.

> ✍ 17வது மக்களவைத் தேர்தலுக்கு (2019) முன்னதாக இந்தியாவில் 7 தேசிய கட்சிகள், 52 மாநிலக் கட்சிகள் மற்றும் 2354 பதிவு செய்யப்பட்ட கட்சிகள் இருந்தன.

| சட்டத்திருத்தம் | விளக்கம் |
|---|---|
| 8-வது சட்டத்திருத்தம் (1960) | மக்களவை (ம) மாநில சட்டப்பேரவையில் பட்டியல் இனத்தவர், பழங்குடியினத்தவர் மற்றும் ஆங்கிலோ இந்தியர்களின் இட ஒதுக்கீட்டை 1970 வரை நீட்டித்தது. |
| 23-வது சட்டத்திருத்தம் (1970) | மக்களவை (ம) மாநில சட்டப்பேரவையில் பட்டியல் இனத்தவர்,பழங்குடியினத்தவர் மற்றும் ஆங்கிலோ இந்தியர்களின் இட ஒதுக்கீட்டை 1980 வரை நீட்டித்தது. |
| 45 வது சட்டத்திருத்தம் (1980) | மக்களவை (ம) மாநில சட்டப்பேரவையில் பட்டியல் இனத்தவர், பழங்குடியினத்தவர் மற்றும் ஆங்கிலோ இந்தியர்களின்இட ஒதுக்கீட்டை 1990 வரை நீட்டித்தது. |
| 62-வது சட்டத்திருத்தம் (1989) | மக்களவை (ம) மாநில சட்டப்பேரவையில் பட்டியல் இனத்தவர், பழங்குடியினத்தவர் மற்றும் ஆங்கிலோ இந்தியர்களின் இட ஒதுக்கீட்டை 2000 வரை நீட்டித்தது. |
| 79-வது சட்டத்திருத்தம் (2000) | மக்களவை (ம) மாநில சட்டப்பேரவையில் பட்டியல் இனத்தவர், பழங்குடியினத்தவர் மற்றும் ஆங்கிலோ இந்தியர்களின்இட ஒதுக்கீட்டை 2010 வரை நீட்டித்தது. |
| 95-வது சட்டத்திருத்தம் (2009) | மக்களவை (ம) மாநில சட்டப்பேரவையில் பட்டியல் இனத்தவர், பழங்குடியினத்தவர் மற்றும் ஆங்கிலோ இந்தியர்களின்இட ஒதுக்கீட்டை 2020 வரை நீட்டித்தது. |
| 104-வது சட்டத்திருத்தம் (2020) | மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவையில் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினத்தவர் இட ஒதுக்கீட்டை 2030 வரை நீட்டித்தது.<br>நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றத்தில் ஆங்கிலோ – இந்தியருக்கான இட ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டது. |

**விதி 335 - பணிகள் மற்றும் பதவிகளுக்கு SC, ST முன்னுரிமை :**

- நிர்வாகத்தின் செயல்திறன் குறையாத வண்ணம் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர்களுக்கு பணி மற்றும் பதவிக்கான கோரிக்கை அரசியலமைப்பில் கருத்தில் கொள்ளப்பட்டது.
- SC, ST நலனுக்காக தேர்வில் தகுதிக்கான மதிப்பெண் குறைக்கப்பட்டது. (82 வது சட்டத்திருத்தம், 2000)

**விதி 336 - சில பணிகளில் ஆங்கிலோ - இந்திய சமூகத்தவருக்கான சிறப்பு சலுகைகள் :**

- சில பணிகளில் ஆங்கிலோ – இந்தியருக்கான இடஒதுக்கீட்டை பற்றி இச்சரத்து விளக்குகிறது.
- விடுதலைக்கு முன்பு இரயில்வே துறை, சுங்கத்துறை, தபால் துறை மற்றும் தந்தி துறையில் ஆங்கிலோ – இந்திய வகுப்பினர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது.
- விடுதலைக்கு பின்னரும் இடஒதுக்கீடு முறை தொடர்ந்தது.
- இந்திய அரசியலமைப்பில் அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த 10 ஆண்டுகளுக்கு பின் இந்த இடஒதுக்கீடு முறை அனைத்தும் நிறுத்தப்படும் என கூறப்பட்டது அதன்படி 1960 –க்கு பின்பு இம்முறை பின்பற்றப்படவில்லை.

**விதி 337 - ஆங்கிலோ - இந்திய சமூகத்தவர் பயன்பாட்டுக்குக் கல்வி மானியம் வழங்குதல் சம்பந்தமான சிறப்பு சரத்துக்கள் :**

- இச்சரத்து ஆங்கிலோ – இந்திய சமூகத்தின் கல்வி நலனுக்காக சிறப்பு சலுகைகள் வழங்குவதை குறிப்பிடுகிறது.
- 1948 மார்ச் 30 வரை எந்த அளவிற்கு கல்வி மானியங்கள் ஆங்கிலோ – இந்திய சமூகத்தினருக்கு வழங்கப்பட்டு வந்ததோ அதே அளவு மானியத்தொகை இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படும் என்றும் அதன் பின்னர் படிப்படியாக மானியத் தொகையின் அளவினை குறிப்பிட்ட சதவீதம் குறைக்கப்படும் எனவும் கூறப்பட்டது.
- அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த 10 ஆண்டுகளுக்கு பிறகு ஆங்கிலோ – இந்திய சமூகத்தினரின் கல்விக்காக வழங்கப்படும் மானியம் முழுவதும் நிறுத்தப்படும் என கூறப்பட்டிருந்தது. அதன்படி 1960 ம் ஆண்டுக்கு பின் அனைத்து மானியங்களும் நிறுத்தப்பட்டது.

# 22 ஆட்சி மொழிகள்

| பகுதி – XVII | விதி 343 – 351 |
|---|---|

| | |
|---|---|
| **விதி 343** | ஒன்றிய அரசின் அலுவல் மொழி |
| **விதி 344** | அலுவல் மொழிக்கான நாடாளுமன்ற ஆணையம் மற்றும் குழு |
| **விதி 345** | மாநில அலுவல் மொழி அல்லது அலுவல் மொழிகள் |
| **விதி 346** | மாநிலங்களுக்கிடையே அல்லது மாநிலம் மற்றும் ஒன்றியத்திற்கு இடையேயான தகவல் தொடர்பு மொழி |
| **விதி 347** | ஒரு மாநிலத்தின் மக்கள் தொகையில் ஒரு பகுதி மக்களால் பேசப்படும் மொழி தொடர்பான சிறப்பு சலுகைகள் |
| **விதி 348** | உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம், சட்டங்கள் மற்றும் மசோதாக்களுக்கு பயன்படுத்தப்படும் மொழி<br>(உச்ச, உயர் நீதிமன்ற தீர்ப்புகள் **ஆங்கிலத்திலேயே** வழங்கப்பட வேண்டும்) |
| **விதி 349** | மொழி சம்பந்தமான சட்டங்கள் இயற்றுவதற்கான சிறப்பு நடைமுறை |
| **விதி 350** | குறைகளைத் தீர்க்கும் முறையீடுகளுக்காகப் பயன்படுத்தப்படும் மொழிகள் |
| **விதி 350 A** | தொடக்க நிலையில் தாய்மொழிப் போதனைக்கான வசதியை ஏற்படுத்தித் தருதல் |
| **விதி 350 B** | மொழிச் சிறுபான்மையினருக்கான சிறப்பு அலுவலர் |
| **விதி 351** | இந்தி மொழி வளர்ச்சிக்கான சிறப்பு நெறிமுறைகள் |

- அரசியலமைப்பின் பகுதி XVIIல், விதிகள் 343 – 351 வரை ஆட்சி மொழிகள் பற்றிக் குறிப்பிடுகிறது.
- நாட்டில் 97% மக்களால் 23 முக்கிய மொழிகள் பேசப்படுகின்றன. அவற்றில் ஆங்கிலம் தவிர்த்து 22 முக்கிய மொழிகள் அரசியலமைப்பின் 8 வது அட்டவணையில் இடம்பெற்றுள்ளன.
- இந்தியா முழுவதும் ஒரே சீரான நிர்வாகத்தை ஏற்படுத்த ஆங்கிலம் நீதிமன்ற மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

| அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் | | | |
|---|---|---|---|
| அஸ்ஸாமி | கன்னடம் | ஒரியா | தெலுங்கு |
| வங்காளி | காஷ்மீர் | தமிழ் | உருது |
| குஜராத்தி | மலையாளம் | பஞ்சாபி | |
| இந்தி | மராத்தி | சமஸ்கிருதம் | |

- அரசியலமைப்பு சட்டத்தில் ஆரம்பத்தில் 14 அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் இருந்தன.
- பின்னர். 1967 ல், 21 வது சட்டத்திருத்தத்தின்படி சிந்தி மொழி சேர்க்கப்பட்டது.
- 1992ல், 71 வது சட்டத்திருத்தத்தின்படி 3 மொழிகள் சேர்க்கப்பட்டது – கொங்கனி, மணிப்புரி, நேபாளி
- 2003ல், 92 வது சட்டத்திருத்தத்தின் படி 4 மொழிகள் சேர்க்கப்பட்டது – போடா, டோங்கிரி, மைதிலி, சாந்தாலி

- இந்தியாவின் அலுவல் மொழி – **ஹிந்தி**
- இந்தியாவின் அலுவல் இணைப்பு மொழி – **ஆங்கிலம்**

## இந்திய அரசியலமைப்பின் சட்டத்திருத்தங்கள் (Constitutional Amendments)

**இந்திய அரசியலமைப்பு சட்டத்திருத்தங்கள் (1 முதல் 106 வரை)**

| வ. எண் | சட்டத்திருத்தம் மற்றும் ஆண்டு (Amendment and Its Year) | நோக்கங்கள் மற்றும் தொடர்புடைய விதிகள், பகுதிகள், அட்டவணைகள் (Amended Provisions of the Constitution) |
|---|---|---|
| 1 | முதல் சட்டத்திருத்தம் (1951) ★ | 9 வது அட்டவணை இணைக்கப்பட்டது.<br>நிலச்சீர்த்திருத்தம், ஜமீன்தாரி முறை ஒழிப்பு தொடர்பானது.<br>அடிப்படை உரிமைகள் தொடர்பான சில நடைமுறைகள் கொண்டு வரப்பட்டது.<br>பேச்சு மற்றும் வெளிப்பாடு சுதந்திரம், பொது ஒழுங்கு, வெளிநாட்டு அரசுகளுடன் நட்புறவுகள் மற்றும் ஒரு குற்றத்திற்கான தூண்டுதல் ஆகியவற்றின் மீது 3 தடைகள் விதிக்கப்பட்டன.<br>சமூக மற்றும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய வகுப்புகளின் முன்னேற்றத்திற்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்ய மாநிலத்திற்கு அதிகாரம் வழங்கியது.<br>தொடர்புடைய விதிகள் :<br>◆ 15, 19, 85, 87, 174, 176, 341, 342, 372 மற்றும் 376.<br>விதிகள் 31 A, 31 B மற்றும் அட்டவணை IX சேர்க்கப்பட்டது. |
| 2 | 2-வது சட்டத்திருத்தம் (1952) | பாராளுமன்றத்தில் மாநிலங்களின் பிரதிநிதித்துவம்.<br>1951ம் ஆண்டு மக்கள்தொகையின் அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 7,50,000 நபர்களுக்கு ஒரு பிரதிநிதி என்று நிர்ணயம் செய்யப்பட்டது.<br>தொடர்புடைய விதி : 81 |
| 3 | 3-வது சட்டத்திருத்தம் (1954) | பொதுமக்களின் நலன் கருதி உணவு பொருள்கள், கால்நடை தீவனம், கச்சா பருத்தி, பருத்தி விதை, மூல சணல் உற்பத்தி மற்றும் விநியோகத்தை கட்டுப்படுத்த நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டது.<br>தொடர்புடைய அட்டவணை : VII |
| 4 | 4-வது சட்டத்திருத்தம் (1955) | 9வது அட்டவணையில் சில சொத்து மீதான கட்டுப்பாடுகள் குறித்து மசோதாக்கள் சேர்க்கப்பட்டது.<br>நீதிமன்றங்களுக்கு அப்பால் கட்டாயமாக கையகப்படுத்தப்படும் தனியார் சொத்துகளுக்கு கொடுக்கப்படும் பதில் இழப்பீட்டு அளவு<br>தொடர்புடைய விதிகள் : 31, 31A, 305<br>தொடர்புடைய அட்டவணை : IX |

| | | |
|---|---|---|
| 5 | 5-வது சட்டத்திருத்தம் (1955) | ✎ புதிய மாநிலங்களை உருவாக்குவது அல்லது ஏற்கனவே உள்ள மாநில எல்லைகளை மாற்றுவது தொடர்பான மசோதாக்கள் மீது மாநில சட்டமன்றம் தனது கருத்துக்களை வெளிப்படுத்த ஒரு காலக்கெடுவை நிர்ணயிக்க குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளித்தல்.<br>✎ தொடர்புடைய விதி : 3 |
| 6 | 6-வது சட்டத்திருத்தம் (1956) ★ | ✎ மாநிலங்களுக்கிடையே நடைபெறும் வர்த்தகத்தில் சம்பந்தப்பட்ட பொருட்களின் மீது வரிவிதிக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டது. (பத்திரிக்கைகளைத் தவிர்த்து விற்பனை அல்லது கொள்முதல் செய்யும் பொருட்கள்)<br>✎ வரிகளை உயர்த்தும் பொழுது மத்திய மற்றும் மாநில பட்டியலில் திருத்தம் கொண்டு வருதல்.<br>✎ தொடர்புடைய விதிகள் : 269, 286<br>✎ தொடர்புடைய அட்டவணை : VII |
| 7 | 7-வது சட்டத்திருத்தம் (1956) | ✎ மாநிலங்கள் மொழிவாரியாக மறுசீரமைப்பு செய்யப்பட்டது.<br>✎ ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்திற்கு<br>◆ பொதுவான ஆளுநர் இருக்கலாம்.<br>◆ பொதுவான ஒரு உயர் நீதிமன்றம் அமைக்கப்படலாம்.<br>✎ இந்திய அரசியலமைப்பின் 7வது பகுதி (A, B, C, D மாநிலங்கள்) நீக்கம் செய்யப்பட்டது.<br>✎ உயர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பை யூனியன் பிரதேசங்களுக்கு விரிவுபடுத்தியது.<br>✎ தொடர்புடைய விதிகள் :<br>◆ 1, 49, 80, 81, 82, 13, 153, 158, 168, 170, 171, 216, 217, 220, 222, 224, 230, 231, 232, 258A, 290A, 298, 350A, 350B, 371, 372A, 378A<br>✎ தொடர்புடைய அட்டவணைகள் :<br>◆ I, II, IV மற்றும் VII<br>✎ பகுதி 8 திருத்தம் செய்யப்பட்டது. |
| 8 | 8-வது சட்டத்திருத்தம் (1960) | ✎ மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவையில் பட்டியல் இனத்தவர், பழங்குடியினத்தவர் மற்றும் ஆங்கிலோ இந்தியர்களின் இட ஒதுக்கீட்டை மேலும் பத்து வருடங்கள் (1970 வரை) நீட்டித்தது.<br>✎ தொடர்புடைய விதி : 334 |
| 9 | 9-வது சட்டத்திருத்தம் (1960) ★ | ✎ இந்தியா – பாகிஸ்தான் உடன்படிக்கை 1958ன்படி மேற்கு வங்கத்தில் அமைந்திருக்கும் இந்திய ஒன்றிய எல்லைக்குட்பட்ட பெருபாரி பகுதி பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்டது.<br>✎ தொடர்புடைய அட்டவணை : I |

# 30 அரசியலமைப்பு சாராத அமைப்புகள்

**அரசியலமைப்பு சாராத அமைப்புகள் :**

- அரசியலமைப்பு அந்தஸ்து இல்லாத அமைப்புகள் அரசியலமைப்பு சாராத அமைப்புகள் என அழைக்கப்படுகின்றன.
- இவ்வமைப்புகள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்படுகின்றன. அவை,
  1. சட்டம் சாரா அமைப்புகள்
  2. சட்டம் சார் அமைப்புகள்

| அரசியலமைப்பு சாராத அமைப்புகள் (Non Constitutional Bodies) | | |
|---|---|---|
| **வ. எண்** | **அமைப்புகள்** | **உருவாக்கப்பட்ட ஆண்டு** |
| **சட்டம் சாரா அமைப்புகள் (Non Statutory Bodies)** | | |
| 1. | தேசிய திட்டக்குழு | மார்ச் 15, 1950 |
| 2. | தேசிய வளர்ச்சிக் குழு | ஆகஸ்ட் 06, 1952 |
| 3. | நிதி ஆயோக் | ஜனவரி 01, 2015 |
| **சட்டம் சார் அமைப்புகள் (Statutory Bodies)** | | |
| 4. | மத்திய புலனாய்வு அமைப்பு | 1963 |
| 5. | மத்திய ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆணையம் | 1964 |
| 6. | லோக் அதாலத் (மக்கள் நீதிமன்றம்) | 1987 |
| 7. | தேசிய பெண்கள் ஆணையம் | ஜனவரி 31, 1992 |
| 8. | மாநில பெண்கள் ஆணையம் | 1993 (தமிழ்நாடு) |
| 9. | தேசிய மனித உரிமைகள் ஆணையம் | அக்டோபர் 12, 1993 |
| 10. | மாநில மனித உரிமைகள் ஆணையம் | ஏப்ரல் 17, 1997 (தமிழ்நாடு) |
| 11. | மத்திய தகவல் ஆணையம் | 2005 |
| 12. | மாநில தகவல் ஆணையம் | அக்டோபர் 7, 2005 (தமிழ்நாடு) |
| 13. | தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் | 2005 |
| 14. | தேசிய புலனாய்வு முகமை | 2009 |
| 15. | லோக்பால் | 2014 |
| 16. | லோக் ஆயுக்தா | 2014 |
| 17. | தேசிய சிறுபான்மையினர் ஆணையம் | மே 17, 1993 |
| 18. | தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் | 1988 |
| 19. | தேசிய குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் | 2007 |
| 20. | மாநில குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் | 2005 (தமிழ்நாடு) |
| 21. | இந்திய சட்ட ஆணையம் | 1834 |
| 22. | இந்திய எல்லை நிர்ணய ஆணையம் | 1951 |
| 23. | இந்திய வழக்குரைஞர்கள் சங்கம் | 1961 |

# சட்டம் சாரா அமைப்புகள்

## 30.1 திட்டக்குழு

- திட்டக்குழுவானது (Planning Commission) K.C. **நியோகி கமிட்டி**யின் (1946) பரிந்துரையின் பேரில் **மார்ச் 15, 1950ல்** ஏற்படுத்தப்பட்டது.
- திட்டக்குழுவை **உருவாக்கியவர்** பிரதமர் **ஜவஹர்லால் நேரு** ஆவார்.
- இது அரசியல் அமைப்பினால் உருவாக்கப்பட்ட அமைப்போ, சட்டத்தினால் உருவாக்கப்பட்ட அமைப்போ அல்ல. இந்திய அரசின் **அமைச்சரவை குழு தீர்மானத்தின் மூலம் உருவாக்கப்பட்டது.**
- இது ஒரு **ஆலோசனை அமைப்பாகும்**.
- இக்குழு **சூப்பர் கேபினட், பொருளாதார கேபினட்** மற்றும் **இணை கேபினட்** என்றும் அழைக்கப்படுகிறது. திட்டக்குழு முழுமையாக மத்திய அளவில் அமைக்கப்பட்ட அமைப்பாகும். இதில் மாநிலங்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லை.

**நோக்கம் (Objective) :**

- நாட்டின் வளங்களை மிகுந்த திறனுடனும், சமநிலையுடனும் பயன்படுத்துவதற்கான திட்டத்தை உருவாக்க வேண்டும்.
- நாட்டில் தனிநபர் வருமானத்தை அதிகரிப்பதுடன் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த வேண்டும்.

> திட்டங்களை உருவாக்குவது தொடர்பான ஒரு ஆலோசகர் என்ற பங்களிப்பினை திட்ட ஆணையம் ஆற்றுகிறது. அத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது மத்திய – மாநில அரசுகளின் கடமையாகும்.

**அமைப்பு (Organisation) :**

- தலைவர் – இந்தியப் **பிரதமர்** திட்டக்குழுவின் பதவிவழித் தலைவர் ஆவார்.
- துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம் நிர்ணயிக்கப்படவில்லை
- செயலர் – இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த ஒருவர் செயலராக நியமிக்கப்படுகிறார்.

| துணைத் தலைவர் | உறுப்பினர்கள் |
|---|---|
| ✍ இவர் கேபினட் அமைச்சருக்கு இணையான அந்தஸ்து பெற்றுள்ளார்.<br>✍ திட்டக்குழு முழுநேரமும் பணியாற்றும் துணைத்தலைவரைக் கொண்டுள்ளது. இவரே திட்டக் குழுவின் உண்மையான நிர்வாகத் தலைவராக விளங்குகிறார்.<br>✍ துணைத் தலைவர் அமைச்சரவையால் நியமிக்கப்படுகிறார். எனினும், இவர் அமைச்சரவையில் உறுப்பினர் இல்லை.<br>✍ அமைச்சரவைக் கூட்டங்களில் வாக்களிக்க முடியாது ஆனால் கலந்து கொள்ளலாம்.<br>✍ துணைத்தலைவர் ஐந்தாண்டுத் திட்ட வரைவு அறிக்கையை உருவாக்குவதற்கும் அதனை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கும் பொறுப்புடையவர் ஆவார். | ✍ 4 முதல் 7 வரையிலான முழுநேரம் பணியாற்றும் நிபுணர்கள் இடம் பெறுகின்றனர்.<br>✍ இவர்கள் துணை அமைச்சர் அந்தஸ்தைப் பெற்றுள்ளனர்.<br>✍ மத்திய அரசின் சில அமைச்சர்கள் இதன் பகுதிநேர உறுப்பினர்களாக நியமிக்கப்படுகின்றனர்.<br>✍ பகுதி நேர உறுப்பினர்களின் எண்ணிக்கையானது அரசின் விருப்பத்தை பொறுத்து மாறுபடும்.<br>✍ உறுப்பினர்களுக்கு எவ்வித தகுதி விளக்கமும் கிடையாது.<br>✍ இவர்கள் அரசின் விருப்பப்படி நியமிக்கப்படுவார்கள். |

## மத்திய ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு (CVC) தலைமை ஆணையர்கள்

| வ.எண் | பெயர் | தொடக்கம் | முடிவு |
|---|---|---|---|
| 1 | நீட்டு சீனிவாச ராவ் | 19 பிப்ரவரி 1964 | 23 ஆகஸ்ட் 1968 |
| 2 | எஸ். தத் | 28 அக்டோபர் 1968 | 16 பிப்ரவரி 1972 |
| 3 | B. K. ஆசார்யா | 9 செப்டம்பர் 1972 | 8 செப்டம்பர் 1977 |
| 4 | M. G. பிம்புத்கர் | 17 செப்டம்பர் 1977 | 30 ஏப்ரல் 1980 |
| 5 | R. K. திரிவேதி | 30 அக்டோபர் 1980 | 18 ஜுன் 1982 |
| 6 | R. P.கண்ணா | 8 ஜுலை 1982 | 7 ஜுலை 1985 |
| 7 | U. C அகர்வால் | 8 ஜுலை 1985 | 7 ஜுலை 1988 |
| 8 | C. G. சோமையா | 17 அக்டோபர் 1988 | 26 மார்ச் 1990 |
| 9 | T. U. விஜயசேகரன் | 4 ஏப்ரல் 1990 | 3 ஏப்ரல் 1995 |
| 10 | N.விட்டல் | 3 செப்டம்பர் 1998 | 2 செப்டம்பர் 2002 |
| 11 | P.சங்கர் | 3 செப்டம்பர் 2002 | 2 செப்டம்பர் 2006 |
| 12 | பிரதியுஷ் சின்ஹா | 7 செப்டம்பர் 2006 | 6 செப்டம்பர் 2010 |
| 13 | P. J.தாமஸ் | 7 செப்டம்பர் 2010 | 3 மார்ச் 2011 |
| 14 | பிரதீப் குமார் | 14 ஜுலை 2011 | 28 செப்டம்பர் 2014 |
| 15 | ராஜீவ் | 29 செப்டம்பர் 2014 | 9 ஜுன் 2015 |
| 16 | K.V. சௌத்ரி | 10 ஜுன் 2015 | 9 ஜுன் 2019 |
| 17 | சரத் குமார் | 11 ஜுன் 2019 | 24 ஏப்ரல் 2020 |
| 18 | சஞ்சய் கோத்தாரி | 25 ஏப்ரல் 2020 | 24 ஜுன் 2021 |
| 19 | சுரேஷ் N. பட்டேல் | 25 ஜுன் 2021 | 24 டிசம்பர் 2022 |
| 20 | பிரவீன் குமார் ஸ்ரீவஸ்தவா | 28 டிசம்பர் 2022 | தற்போது வரை |

| மத்திய புலனாய்வு அமைப்பு Vs மத்திய ஊழல் கண்காணிப்பு அமைப்பு | | |
|---|---|---|
| | **CBI** | **CVC** |
| அடிப்படை | சந்தானம் குழு பரிந்துரை, உள்துறை அமைச்சகத்தின் தீர்மானம் | சந்தானம் குழு பரிந்துரை, ஆட்சித்துறை தீர்மானம் (2003 – சட்டபூர்வ அமைப்பு) |
| ஆண்டு | 1963 | 1964 |
| அமைப்பு | மேலாண்மை இயக்குநர் + ஊழியர்கள் | 1 தலைவர் + 2 உறுப்பினர்கள் |
| பதவிக்காலம் | வரையறுக்கப்படவில்லை | 4 ஆண்டுகள் அல்லது 65 வயது |
| பதவிநியமனம் | குடியரசு தலைவர் | குடியரசு தலைவர் |
| பதவி நீக்கம் | குடியரசு தலைவர் | குடியரசு தலைவர் |

## 30.15 லோக்பால்

### ஊழல் தடுப்பு அமைப்புகள் (Anti-Corruption Agencies)

### ஆம்புட்ஸ்மேன் அமைப்பு (Ombudsman) :

- ஆம்புட்ஸ்மேன் என்ற சொல் சுவீடன் மொழியில் உள்ள ஆம்பூட் என்ற சொல்லிருந்து பெறப்பட்டது. (ஆம்புட் – பிரதிநிதி என்று பொருள்).
- ஆம்புட்ஸ்மேன் – என்றால் நிர்வாக முறைகேட்டிலிருந்து குடிமக்களை காப்பாற்றும் அதிகாரி என்று பொருள்.

| உலகளவில் ஊழல் தடுப்பு அமைப்புகள் (ஆம்புட்ஸ்மேன்) | |
|---|---|
| நாடுகள் | ஆண்டு |
| ஸ்வீடன் (உலகில் 1st) | 1809 |
| பின்லாந்து | 1919 |
| டென்மார்க் | 1955 |
| நார்வே | 1962 |
| நியூசிலாந்து (காமன்வெல்த் நாடுகளில் 1st) | 1962 |
| இந்தியா | 2014 |

### இந்தியாவில் ஊழல் தடுப்பு அமைப்புகள் (Anti-Corruption Agencies in India) :

- இந்தியாவில் அசோக் குமார் சென் (சட்ட அமைச்சர்) என்பவரால் அரசியலமைப்பு ஓம்புட்ஸ்மேன் என்ற கருத்து முதன் முதலில் முன்மொழியப்பட்டது.
- இந்தியாவில் ஊழல் தடுப்பு அமைப்பாக லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா ஆகியவை உள்ளன.
- மத்தியில் லோக்பால், மாநிலங்களில் லோக் ஆயுக்தா ஊழல் தடுப்பு அமைப்பாக செயல்படுகிறது.
- லோக்பால் என்றால் மக்கள் காவலன் என்று பொருள்.
- லோக்பால் என்ற வார்த்தையை சட்ட வல்லுநர் L.M. சிங்வி 1963ல் அறிவித்தார்.
- லோக்பால் சட்டப்பூர்வ அமைப்பு ஆகும்.
- குடியரசுத் தலைவரால் லோக்பால் அமைப்பு அமைக்கப்பட்டது.
- லோக்பால் அமைப்பு என்பது மத்திய மற்றும் மாநில அளவில் அமைச்சர்கள் மற்றும் செயலாளர்கள் மீதான ஊழல் புகாரை விசாரிக்கும் அமைப்பு ஆகும்.

TAF IAS ACADEMY

- முதல் நிர்வாகச் சீர்திருத்தங்கள் ஆணையத்தின் பரிந்துரையின்படி லோக்பால், லோக் ஆயுக்தா அமைப்பு அமைக்கப்பட்டது.
- மக்களின் குறைகளைத் தீர்க்க அமைக்கப்பட்ட ஜனநாயக அமைப்பு – லோக்பால்
- ஸ்ரீ வீரப்ப மொய்லி தலைமையிலான 2வது நிர்வாகச் சீர்திருத்தங்கள் ஆணையம் லோக்பால் அலுவலகம் விரைவில் நிறுவப்பட வேண்டும் என்று முன்மொழிந்தது.
- 2011 ஆம் ஆண்டில், லோக்பாலுக்கான அண்ணா இயக்கம் தொடங்கப்பட்டது.

**நுகர்வோர் பாதுகாப்பில் வணிகத்தின் பங்கு :**

- விலை உயர்வைத் தவிர்த்தல்
- பதுக்கலை தவிர்த்தல்
- உயர் தரத்திற்கு உத்திரவாதம் அளித்தல்
- பொருட்கள் குறித்த தகவல்கள் அளித்தல்
- விளம்பரங்களின் உண்மை
- தீங்குகளிலிருந்து பாதுகாத்தல்
- நுகர்வோர் குறைபாடுகளைத் தீர்த்தல்
- பணத்தை திருப்பிக் கொடுக்கும் உத்திரவாதம்

- நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் – 1986
- சட்ட அளவீட்டு சட்டம் – 2009
- இந்திய தர நிர்ணய பணியகம் – 1986
- அத்தியாவசிய பொருட்கள் சட்டம் – 1955
- கறுப்பு சந்தைப்படுத்துதல் தடுப்பு மற்றும் பொருட்களின் சட்டம் – 1980

## நுகர்வோர் தொடர்பான சட்டங்கள்

| சட்டம் | ஆண்டு | சிறப்புகள் |
|---|---|---|
| இந்திய ஒப்பந்தச் சட்டம் | 1872 | மக்கள் ஒப்பந்தங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதை உறுதி செய்கின்றது. |
| பொருட்கள் விற்பனைச் சட்டம் | 1930 | விற்பனை ஒப்பந்தத்தில் வெளிப்படையான உத்திரவாதங்களை விற்பனையாளர்கள் செயல்படுத்த மறுப்பதிலிருந்து நுகர்வோர்களைப் பாதுகாக்கின்றது. |
| வேளாண் பொருட்கள் தரப்படுத்துதல் மற்றும் விற்பனைச் சட்டம் | 1937 | வேளாண்மை உற்பத்திப் பொருட்களை நல்ல தரத்துடன் வழங்குவதை உறுதி செய்கின்றது. |
| மருந்து மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம் | 1940 | இந்தியாவில் தரமான & பாதுகாப்பான மருந்துப்பொருட்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் விற்பனை செய்வதை உறுதி செய்கின்றது. |
| இந்தியத் தர நிறுவனச் சட்டம் | 1952 | உற்பத்திப் பொருட்கள் பெற்றிருக்க வேண்டிய குறைந்தபட்ச தரநிலைகளை பூர்த்தி செய்வதைஉறுதி செய்கின்றது. நுகர்வோர்க்கு தரமான பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்கின்றது. |
| உணவுப் பொருட்கள் கலப்படத் தடைச்சட்டம் | 1954 | உணவுப் பொருட்களால் கலப்படம் செய்வதை பரிசோதித்து தரமான உணவுப்பொருட்களை வழங்குவதன் மூலம் நுகர்வோர் உடல் நலத்தை பாதுகாக்கின்றது. |
| மருத்துவப் பொருட்கள் (ம) மாயச் சிகிச்சைகள் (விளம்பரங்கள்) சட்டம் | 1954 | மாயச்சிகிச்சைகள் குறித்து விளம்பரப்படுத்துவதை தடை செய்கின்றது மற்றும் அதனால் விளைந்த தீங்குகளுக்கு தீர்வுகளைக் காண வகை செய்கிறது. |
| அத்தியாவசிய பொருட்கள் சட்டம் | 1955 | அத்தியாவசியப் பொருட்களை விற்பனையாளர்கள் செயற்கையாக விலையேற்றம் செய்யும் நோக்குடன் பதுக்கி வைத்தல் செயற்கைப் பற்றாக்குறையை உருவாக்குதல், கள்ளச் சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்தல் போன்றவற்றை தடைசெய்ய உருவாக்கப்பட்டது. |

# முதன்மை பெண்மணிகள்

## உலகின் முதன்மை பெண்மணிகள் :

| முதல் பெண் | பெயர் |
|---|---|
| பிரதம மந்திரி | சிறிமாவோ பண்டார நாயகே |
| விண்வெளி | வாலென்டினா தெ ரேஷ் கோவா |
| எவரெஸ்ட் சிகரத்தை அளவிட்டவர் | ஜன்கோ தபே |
| ஒலிம்பிக்கில் தங்கம் வென்றவர் | சாரி லோட் கூப்பர் |

## இந்தியாவின் முதன்மை பெண்மணிகள்

### இந்தியாவின் முதன்மை பெண்மணிகள்

- மத்திய அமைச்சரவையில் பதவி வகித்த முதல் பெண் – விஜயலட்சுமி பண்டிட்
- ஐ.நா சபையின் முதல் பெண் தலைவர் (1953) – விஜயலட்சுமி பண்டிட்
- மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் – சுஷ்மா ஸ்வராஜ்
- சுதந்திர இந்தியாவின் முதல் பெண் ஆளுநர் (U.P) – சரோஜினி நாயுடு
- இந்தியாவின் முதல் பெண் பிரதமர் (1966) – இந்திரா காந்தி
- மக்களவையின் சபாநாயகர் (2009 – 2014) – மீரா குமார்
- எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் இந்தியப் பெண் (1984) – பச்சேந்திரிபால்
- இந்திய தேசிய காங்கிரசின் முதல் பெண் தலைவர் (1917) – அன்னிபெசன்ட்
- இந்தியாவின் முதல் பெண் மாநில முதலமைச்சர் (U.P) – சுஜிதா கிருபாளினி
- இந்தியாவின் முதல் பெண் நிதியமைச்சர் – நிர்மலா சீதாராமன்
- இந்தியாவின் முதல் பெண் பாதுகாப்புத்துறை அமைச்சர் – நிர்மலா சீதாராமன்
- உச்ச நீதிமன்ற முதல் பெண் நீதிபதி – பாத்திமா பீவி
- முதல் பெண் காவல்துறை உயர் அதிகாரி (1972) – கிரண்பேடி
- முதல் பெண் குடியரசுத் தலைவர் (2007) – பிரதீபா பாடீல்
- புக்கர் பரிசு பெற்ற முதல் இந்தியப் பெண் – அருந்ததி ராய்
- ராஜ்ய சபாவின் முதல் பெண் துணைத்தலைவர் – மார்கரெட் ஆல்வா
- இந்தியாவின் முதல் பெண் பார்வையற்ற IFS அதிகாரி – BenoZephine NL
- இந்தியாவின் முதல் பெண் போர் விமானி – அவனி சதுர்வேதி
- இந்தியாவின் முதல் பெண் கடற்படை போர் விமானி – சிவாங்கி பதக்
- இந்தியாவின் முதல் பெண் குத்துச்சண்டை வீராங்கனை – மேரி கோம்
- ராஜ்ய சபாவின் முதல் பெண் செயலாளர் – V.S. ரமா தேவி
- லோக் சபாவின் முதல் பெண் செயலாளர் – சினேகலதா ஸ்ரீவஸ்தவா
- அமைச்சரவையில் இடம்பெற்ற முதல் பெண் அமைச்சர் – ராஜ்குமார் அம்ரீத் கௌர்
- முதல் பெண் காவல்துறை இயக்குநர் – காஞ்சன் சௌத்ரி பட்டாச்சாரியா

# 40 இந்திய அரசியலமைப்பின் விதிகள்

## 22 பகுதிகளும் 395 விதிகளும்

| பகுதி - 1 | ஒன்றியமும் அதன் நிலவரையறையும் (The Union and its Territory) |
|---|---|
| விதி 1 | இந்தியா மாநிலங்களின் ஒன்றியம். பாரதம் என அழைக்கப்படுகிறது. |
| விதி 2 | புதிய மாநிலங்கள் அனுமதித்தல் அல்லது ஏற்படுத்துதல் |
| விதி 3 | புதிய மாநிலங்களை உருவாக்குதல் அல்லது உள்ள மாநிலங்களின் பகுதிகள், எல்லைகளை மாற்றியமைத்தல் அல்லது பெயர் மாற்றம் செய்தல். |
| விதி 4 | முதல் மற்றும் நான்காவது அட்டவணைகளில் திருத்தம் மேற்கொள்ள இணைப்புகள், நேர்விளைவுகள், பின்விளைவுகள் தொடர்பான காரியங்களில் விதிகள் 2, 3 இன் கீழ் சட்டங்கள் இயற்றதல். |
| **பகுதி - 2** | **குடியுரிமை (Citizenship)** |
| விதி 5 | அரசியலமைப்பின் தொடக்கக்காலத்தில் குடியுரிமை |
| விதி 6 | பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்குக் குடிபெயர்ந்த சில நபர்களின் குடியுரிமை |
| விதி 7 | பாகிஸ்தானுக்குக் குடிபெயர்ந்து சென்ற சிலரின் குடியுரிமைகள் |
| விதி 8 | இந்தியாவுக்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவழி நபர்கள் சிலரின் குடியுரிமைகள் |
| விதி 9 | அயல் நாட்டுக் குடியுரிமையைத் தன்னிச்சையாக வேண்டிப் பெறும் நபர்கள் இந்தியக் குடிமக்களாக மாட்டார்கள். |
| விதி 10 | குடியுரிமைத் தொடர்ச்சி |
| விதி 11 | நாடாளுமன்றம் சட்டத்தால் குடியுரிமையை ஒழுங்குபடுத்துதல் |
| **பகுதி - 3** | **அடிப்படை உரிமைகள் (Fundamental Rights)** |
| விதி 12 | சொற்பொருள் விளக்கம். அரசு என்பதின் உள்ளடக்கம். |
| விதி 13 | சட்டங்கள் அடிப்படை உரிமைகளுடன் முரண்படுதல் அல்லது மதிப்பிழக்கச் செய்தல் |
| விதி 14 | சட்டத்தின் முன் அனைவரும் சமம் |
| விதி 15 | சமயம், இனம், சாதி, பாலினம் அல்லது பிறந்த இடம் காரணமாக வேறுபடுத்துதலுக்குத் தடை |
| விதி 16 | பொது வேலைவாய்ப்பில் சமத்துவம் |
| விதி 17 | தீண்டாமை ஒழிக்கப்பட்டது. |
| விதி 18 | பட்டங்கள் வழங்குவதும் பெறுவதும் தடுக்கப்பட்டுள்ளது. |
| விதி 19 | பேச்சு சுதந்திரம்,சங்கம், இயக்கம்,குடியிருப்பு,தொழில் உரிமை முதலிய 6 உரிமைகள் |
| விதி 20 | குற்றங்களுக்கான குற்றத் தீர்ப்பிலிருந்து பாதுகாத்தல் |
| விதி 21 | உயிரையும் தனிநபர் சுதந்திரத்தையும் பாதுகாத்தல். |
| விதி 21A | இலவச கட்டாயக் கல்வி – கல்வி உரிமை |

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

# TAF IAS ACADEMY

THINK YOU CAN.

Coaching for : UPSC - TNPSC - POLICE - SI - TET - TRB - RAILWAY - BANKING - SSC

| | |
|---|---|
| கடலூர் | 8220444230 |
| கள்ளக்குறிச்சி | 7358765300 |
| கடையம் | 8148110300 |
| கரூர் | 9159054300 |
| கம்பம் | 9363390300 |
| காரைக்குடி | 9626045300 |
| காட்டுமன்னார்கோயில் | 8807384300 |
| கிருஷ்ணகிரி | 8523968300 |
| குளித்தலை | 9791849300 |
| கும்பகோணம் | 9751190400 |
| கோவில்பட்டி | 8754888300 |
| கோபிச்செட்டிபாளையம் | 6382122300 |
| கோயம்புத்தூர் | 9629291300 |
| சங்கரன்கோவில் | 9942016008 |
| சங்கராபுரம் | 8807574300 |
| சிதம்பரம் | 7358764300 |
| சிவகங்கை | 9843979300 |
| சீர்காழி | 7845570300 |
| சுரண்டை | 8925786900 |
| செங்கல்பட்டு | 7358983300 |
| செய்யாறு | 9787088300 |
| செஞ்சி | 9597863300 |
| செங்கம் | 9342387300 |
| சேலம் | 8883351300 |
| தஞ்சாவூர் | 9751130400 |
| தருமபுரி | 8270445300 |
| தலைவாசல் | 8148346300 |
| தாராபுரம் | 8778934800 |
| திண்டிவனம் | 9787087300 |
| திண்டுக்கல் | 8438779300 |
| திருப்பத்தூர் | 8754987300 |
| திருவண்ணாமலை | 9566186300 |
| திருவள்ளூர் | 9787010300 |
| திருவாரூர் | 9751121400 |
| திருக்கோவிலூர் | 9751560300 |

| | |
|---|---|
| திருச்சி | 8807752300 |
| திருப்பூர் | 8870320300 |
| திருநெல்வேலி | 9790370300 |
| துறையூர் | 7548842300 |
| தூத்துக்குடி | 8870681300 |
| தென்காசி | 9597587300 |
| தேனி | 9363750300 |
| தொழுதூர் | 8220444501 |
| நாகப்பட்டினம் | 9791159300 |
| நாகர்கோவில் | 9790509300 |
| நாமக்கல் | 8870836300 |
| பட்டுக்கோட்டை | 8438621400 |
| பண்ருட்டி | 9787026300 |
| பரமக்குடி | 9943260300 |
| பாவூர்சத்திரம் | 9003056300 |
| புதுக்கோட்டை | 6384087300 |
| புளியங்குடி | 8870424300 |
| பெரம்பலூர் | 7395836767 |
| பொள்ளாச்சி | 8220877300 |
| மணப்பாறை | 8754125004 |
| மதுரை | 9952632300 |
| மயிலாடுதுறை | 9790280400 |
| மன்னார்குடி | 9894622400 |
| மண்ணச்சநல்லூர் | 9597515300 |
| மேட்டூர் | 9840605300 |
| வடலூர் | 8220444801 |
| வள்ளியூர் | 9940941300 |
| வாசுதேவநல்லூர் | 9047988300 |
| விருத்தாசலம் | 7397620900 |
| விருதுநகர் | 9597845300 |
| விழுப்புரம் | 8220444246 |
| விளாத்திகுளம் | 9791610300 |
| வேலூர் | 8754380300 |
| அம்பத்தூர் | 6381310300 |
| அரக்கோணம் | 7845849300 |

| | |
|---|---|
| அறந்தாங்கி | 9363395300 |
| அம்பை | 8807604300 |
| அரியலூர் | 9363599300 |
| அருப்புக்கோட்டை | 9363945300 |
| அரூர் | 8754390300 |
| அவிநாசி | 9952432300 |
| ஆத்தூர் | 6385745300 |
| ஆலங்குளம் | 9940845300 |
| ஆற்காடு | 9787067300 |
| இராஜபாளையம் | 9159055200 |
| இராமநாதபுரம் | 8925389300 |
| ஈரோடு | 7548826300 |
| ஊட்டி | 9626257300 |
| எடப்பாடி | 8807301300 |
| ஓசூர் | 6385868300 |
| ஓமலூர் | 7604826300 |

TAF ICE — REACH THE UNREACHED — Institute of Central Exams

மத்திய அரசு பணிகளுக்கான பயிற்சி நிறுவனம்...

Branches

UPSC | BANKING | SSC | RAILWAY | DEFENCE

| | |
|---|---|
| தென்காசி | 7305386300 |
| கடலூர் | 9080376038 |
| விழுப்புரம் | 8438730300 |
| மதுரை | 9363620300 |
| சங்கரன்கோவில் | 7200416300 |
| நெய்வேலி | 9787091300 |
| தஞ்சாவூர் | 8122032400 |
| தருமபுரி | 9787075300 |
| கோவில்பட்டி | 8754888300 |
| ஈரோடு | 7548826300 |
| சேலம் | 8883351300 |
| கோயம்புத்தூர் | 9629291300 |

Scan QR Code

TAF website | TAF YouTube | TAF Instagram

**TAF ENGINEERING SERVICES : 9500259300**

**TAF ONLINE OFFICE : 9342326500, 76958 56500, 9500384300, 6382809713, 8668029422**


AAMU PUBLICATION TENKASI

புத்தக தேவைக்கு (கூரியர் & தபால்) பெற...

செல் : 95669 74903, 89400 77756

AKASH BOOK CENTRE

Stationery & Gifts Cell : 9566974703


**Head Office : TENKASI 9597587300** TAF IAS ACADEMY